# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 புரட்டாதி 21 சனிக்கிழமை (07-10-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:246





யாழ். பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழா பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நேற்று இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள். முதலாவது படத்தில் குடை, கொடி மற்றும் ஆலவட்டம் சகிதம் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை அரங்கத்துக்கு அழைத்துச் செல்லப்படுவதையும், இரண்டாவது படத்தில் துணைவேந்தர் உரை நிகழ்த்துவதையும் அருகே பீடாதிபதிகள், பேராசிரியர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் காணலாம்.

## பம்பலப்பிட்டி லொட்ஜுகள் நேற்றுச் சுற்றிவளைப்பு!

### 10க்கு மேற்பட்டோர் தடுத்துவைப்பு

கொழும்பு,ஒக்.7

கொழும்பு பம்பலப்பிட்டிப் பகுதியில் உள்ள லொட்ஜுகள் அனைத்தும் நேற்றுக்காலை முதல் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு பலத்த தேடுதலுக்கு உட்படுத்தப்பட்டன.

இந்தத் தேடுதலின்போது பத்துக்கும் மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் படையினரால் கைது செய்யப்பட்டு பம்பலப்பிட்டி பொலீஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

தகுந்த காரணமின்றி தங்கியிருந்தமை மற்றும் பொலீஸ் பதிவுகள் இன்றித் தங்கியிருந்தமை ஆகியவை இவர்களின் கைதுக்குக் காரணம் எனக் கூறப்பட்டது.

இதேவேளை பம்பலப்பிட்டிப் பகுதியில் உள்ள லொட்ஜ் ஒன்றைச் சோதனையிட்ட படையினர் அங்கிருந்து 10 லட்சம் ரூபா பெறுமதியான ஹெரோய்ன் போதைப் பொருளைக் கைப்பற்றினர் எனவும் -

இதனையடுத்து லொட்ஜின் உரிமையாளர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார் எனவும் - தெரிவிக்கப்பட்டது. (இ-7)

### உடுப்பிட்டியில் ஷெல்

உடுப்பிட்டிப் பகுதியில் நேற்று விழுந்து வெடித்த ஷெல்லினால் ஒருவர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-109-139-15)

# நாகர்கோயிலில் கடும் சமர்

# புலிகள் ஊடுருவித் தாக்குதல்!

## வெற்றிகரமாக முறியடித்ததாக இராணுவத் தரப்பினர் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்ரோபர்7

**நாகர்கோயில் பகுதியில் உள்ள படையினரின் முன்னணிக் காவலரண் பகுதிக்குள் விடுதலைப் புலிகள் நேற்றுமுன்தினம் ஊடுருவித் தாக்குதல் நடத்தியமையைத் தொடர்ந்து அங்கு இருதரப்புகளுக்கும் இடையில் கடும் சமர் மூண்டது.**

நூற்றுக்கும் மேற்பட்ட விடுதலைப்புலிகளின் அணி ஒன்று படையினரின் முன்னணிக் காவலரண் பகுதிக்குள் வியாழக்கிழமை மாலை 5.30 மணியளவில் ஊடுருவிப் பெரும் தாக்குதலை நடத்தியதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் நேற்று விடுத்த அறிக்கை தெரிவிக்கிறது.

இராணுவம், விமானப்படை, கடற்படை ஆகிய முப்படைகளும் கூட்டாக நடத்திய எதிர்த்தாக்குதல்கள் மூலம் புலிகளின் முயற்சி அன்றையதினம் முறியடிக்கப்பட்டுவிட்ட

(14ஆம் பக்கம் பார்க்க)



யாழ். நகரிலுள்ள சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளர் பணிமனையின் முன்பாக நேற்று சுகாதாரத் தொண்டர்கள் மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட சமயம் எடுக்கப்பட்ட படம்.

(செய்தி இணைப்பில்)

## வாழைச்சேனையில் மோட்டார் தாக்குதல்

மட்டக்களப்பு,ஒக்.7

வாழைச்சேனைப் பொலீஸ் நிலையம் நோக்கி நேற்றுமுன்தினம் இரவு 7.30 மணியளவில் விடுதலைப்புலிகள் மோட்டார் தாக்குதல் நடத்தினர்.

பத்துக்கு மேற்பட்ட மோட்டார் ஷெல்கள் பொலீஸ் நிலையப் பகுதிக்குள் வீழ்ந்து வெடித்தபோதும் சேதம் ஏதும் ஏற்படவில்லை என்று பொலீஸார் தெரிவித்தனர்.

பொலீஸார் பதில் தாக்குதலை நடத்தினர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அதேசமயம் - தியத்தலாவ இராணுவ முகாமில் இருந்து மட்டக்களப்பு படை முகாமுக்கு உணவு மற்றும் பொருள்களை ஏற்றி வந்த லொறி ஒன்று சுங்காங்கேணியில் வைத்து வழிமறிக்கப்பட்டு, அதில் இருந்த பொருள்கள் அபகரிக்கப்பட்டன என்றும் கூறப்பட்டது. (இ-3)

## புலிகளை ஒடுக்கும் யுத்தத்துக்கு இந்தியா அரசியல், தார்மீக ஆதரவு!

### புலனாய்வுத் தகவல்களையும் தருகிறது என்கிறார் ஜனாதிபதி



கொழும்பு,ஒக்7

விடுதலைப் புலிகளை ஒடுக்கும் பொருட்டு எமது அரசாங்கம் நடத்தி வரும் போருக்கு இந்திய அரசாங்கம் அரசியல், தார்மீக ஆதரவு வழங்கிவருகின்றது. அது மட்டுமன்றி போர்த்துறை சார்ந்த புலனாய்வுத் தகவல்களையும் எங்களுக்கு வழங்கி வருகின்றது.

மேற்கண்டவாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

அலரிமாளிகையில் நேற்றுமாலை வெளிநாட்டுச் செய்தியாளர் சங்கப் பிரதிநிதிகளைச் சந்தித்த சமயமே ஜனாதிபதி இப்படிக் கூறினார்.

ஜனாதிபதி செய்தியாளர்களின் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், இலங்கை - இந்திய ஒப்பந்தம் தோல்வி கண்ட பின்னர் இந்தியாவில் அடுத்தடுத்துப் பதவிக்கு வந்த அரசாங்கங்கள் இலங்கை தொடர்பான தமது கொள்கையை மாற்றிக் கொண்டுவிட்டன. எமது நாட்டு இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாணும் முயற்சிக்கு இப்போதைய இந்திய அரசாங்கம் ஆக்கபூர்வமான ஆதரவு அளித்து வருகின்றது என்றார்.

நேற்றைய சந்திப்பில் அவா

(14ஆம் பக்கம் பார்க்க)

## அடுத்த வெள்ளிக்கிழமையே இனி பயணிகள் கப்பல் சேவை

### செவ்வாய், வியாழன் சேவைகள் ரத்து

யாழ்ப்பாணம்,ஒக்.7

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை இடம்பெறும் தேர்தல் காரணமாக 'சிற்றி ஒவ் றிங்கோ' கப்பலின் அடுத்த சேவை எதிர்வரும் வெள்ளிக்கிழமையே இடம்பெறவிருப்பதாக யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

எதிர்வரும் செவ்வாய், வியாழன் ஆகிய தினங்களில் இடம்பெறும் சேவைகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன என்றும் -

அடுத்த சேவை எதிர்வரும் வெள்ளிக்கிழமையே இடம்பெறும் என்றும் - மேலும் தெரிவிக்கப்பட்டது.

அந்தச் சேவையில் பயணம் செய்வதற்கு 200 பேருக்கு பயணச் சீட்டு வழங்கும் பணி இன்று காலை 9.30 மணிமுதல் இடம்பெறவுள்ளதாகவும் சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது. (இ-3)


இன்றைய உதயன்
22 பக்கங்கள்
'ஓவ் செற்' அச்சில்: 14 பக்கங்கள்
இணைப்பு: 8 பக்கங்கள்
தவறாது கேட்டு வாங்குங்கள்


## பலாலித் தளம் நோக்கி புலிகள் ஆட்லறி தாக்குதல்!

கொழும்பு.ஒக்.7

பலாலி இராணுவத்தளம் நோக்கி மீண்டும் விடுதலைப்புலிகள் நேற்று ஆட்லறித் தாக்குதல்களை ஆரம்பித்துள்ளனர் என்று ரோய்ட்டர் செய்தி நிறுவனம் தகவல் வெளியிட்டுள்ளது.

நேற்றுக்காலை ஆரம்பமான இந்தத் தாக்குதல் தொடர்ந்து இடம்பெறுவதாகவும் அந்த நிறுவனம் மேலும் தெரிவித்தது.

இராணுவத்தளத்துக்கு வெளியே ஷெல்கள் வீழ்ந்தன என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவித்ததாகவும் அது குறிப்பிட்டுள்ளது.

பலாலிக்கான விமானச் சேவைகள் காலநிலை காரணமாகப் பாதிக்கப்பட்டிருந்தன என்று படை அதிகாரிகளை மேற்கோள்காட்டி அது மேலும் தகவல் வெளியிட்டுள்ளது. (இ-3)

சனிக்கிழமை தோறும் வெளிவரும் வாரபலன் தவிர்க்கமுடியாத காரணங்களால் இன்றைய உதயனில் இடம்பெறவில்லை. அது பின்னர் வெளிவரும். (ஆ-ர்)

## ஈ.பி.டி.பியின் பிரசார வாகனம் மீது மட்டக்களப்பில் துப்பாக்கிச் சூடு

### உறுப்பினர் ஒருவர் உட்பட மூவர் காயம்

மட்டக்களப்பு,ஒக்.7

மட்டக்களப்பு மாவட்டம் - மகிழூர்ப் பகுதியில் தேர்தல் பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த ஈ.பி.டி.பி. அமைப்பின் வாகனம் ஒன்றின் மீது நேற்றுப்பிற்பகல் 12.45 மணியளவில் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது.

இந்தத் தாக்குதலில் ஈ.பி.டி.பி அமைப்பின் உறுப்பினர் ஒருவர் உட்பட 3பேர் காயமடைந்தனர். படுகாயமடைந்த இருவரும் அக்கட்சியின் ஆதரவாளர்கள் எனத் தெரிவிக்கப்

(14ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# யாழ். மாவட்டம் - பொதுத்தேர்தல் - 2000



கோப்பாய் கோமான்
வன்னியசிங்கம்



தமிழீழத்தந்தை
எஸ்.ஜே.வி.செல்வநாயகம்



தானைத் தலைவன்
அ.அமிர்தலிங்கம்

தந்தை செல்வா, கோப்பாய் கோமான் வன்னியசிங்கம், தானைத் தளபதி அமிர்தலிங்கம், சிந்தனைச் சிற்பி கதிரவேற்பிள்ளை, சிம்மக்குரலோன் சிவசிதம்பரம் போன்ற தமிழ்ப் பெருந்தலைவர்களுடன் இணைந்து கடந்த அரைநூற்றாண்டு காலமாக விடுதலை வேட்கைகள் கொண்டு கொடுமைகள் கோடியேற்று கொள்கையை காத்து நின்று தொண்டுகள் பல புரிந்து கொண்டிருப்பவர் தமிழரசு க.சின்னத்துரை அவர்கள். தூய்மை, நேர்மை, கண்ணியம், தியாகம், வாய்மை, அந்தரங்க சுத்தி, விடா முயற்சி, உறுதி ஆகிய அத்திவாரங்களின் சமுதாயத் தொண்டும் பல புரிந்தவர். தமிழர் விடுதலைக் கூட்டணியின் தமிழ் இனத்தின் விடுதலை ஒளியாக விளங்கும் உதய சூரியன் சின்னத்துக்கு வாக்களித்து தமிழர் விடுதலைக் கூட்டணியை வெற்றி பெறச் செய்யுங்கள்.
விருப்பு வாக்குகளில் ஒன்றை இலக்கம் 10க்கு மேல் இட்டு தமிழர் விடுதலை கூட்டணி வேட்பாளர் தமிழரசு க.சின்னத்துரை அவர்களையும் ஆதரிக்குமாறு பணிவன்புடன் வேண்டுகிறேன்.

*ஆவரங்கால் பொதுமக்கள் சார்பில்*
*மு. ஆனந்தகிருஷ்ணா*
*சமாதான நீதிவான்.*



தலைவர்
மு.சிவசிதம்பரம்
தமிழர் விடுதலைக் கூட்டணி



தமிழரசு க.சின்னத்துரை
உப தலைவர்,
தமிழர் விடுதலைக் கூட்டணி

| | |
|---|---|
|  | X |
| க.சின்னத்துரை | 10 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | | | | | | | | |

(79213)


# தமிழ் மக்களுக்கு எமது வேண்டுகோள்!

* வடக்குக் கிழக்கை இணைத்து திருகோணமலையைத் தலைநகரமாக்கி ஒரு அரசாங்கத்தை நடத்தியவர்கள் நாங்கள்.
* எமது பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்கு இந்தியாவின் நட்பு என்றென்றும் பேணப்படுவது முக்கியமானது எனக் கருதுபவர்கள் நாங்கள்.
* தமிழ் மக்களின் பிரச்சினைகளின் பரிமாணங்களை, ஆழ அகலங்களை அறிந்தவர்கள். அர்ப்பண உணர்வுடன் செயற்படக் கூடியவர்கள் நாங்கள்.

பேரினவாதப் படுகொலைகளையும் ஜனநாயக மறுப்புப் படுகொலைகளையும் முடிவுக்குக் கொண்டு வரவும் அழிவே வாழ்க்கையாகிவிட்ட எமது மண்ணில் சமாதானச் சுடரொளியை ஏற்றிடவும் தமிழ் மக்களின் சுயமரியாதை, கௌரவத்தை உறுதிப்படுத்தும் தீர்வொன்றை எட்டுவதற்கும் மக்கள் அன்றாடம் எதிர்நோக்கும் போக்குவரத்து, சோதனைச் சாவடிப் பிரச்சினையிலிருந்து வேலைவாய்ப்புப் பிரச்சினைவரை அனைத்திற்கும் நடைமுறைச் சாத்தியமான தீர்வுகளைத் துரிதமாகக் காண்பதற்கும் அறிவும் ஆற்றலும் நிறைந்த ஒரு தலைமைக்கு வாக்களியுங்கள்.


<u>குறிப்பு:-</u>

வானம்பாடி ஒலிபரப்புச் சேவையில் இரவு 8.00 மணிக்கு வரதராஜப்பெருமாள் அவர்களின் உரையை நீங்கள் கேட்கலாம்.



த.சுபத்திரன் (றொபேட்)

இல. 3

| | | |
|---|---|---|
| சுயேச்சைக் குழு - 2 |  | X |



அ.வரதராஜப்பெருமாள்

இல. 1

(78943)

# நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் - 2000

யாழ். மாவட்டத்தில் ஐக்கிய தேசிய கட்சியின்
வேட்பாளராகப் போட்டியிடும் வர்த்தகர்

## சி.இ.கோபாலபிள்ளை ஜெயேந்திரா

*அவர்கள் பரிபூரணமாக வெற்றி பெற ஆதரவளிப்போம்!*

| ஐக்கிய தேசியக் கட்சி | | X |
|---|---|---|

| 1 | 2 | X | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 11 | 12 | | | | | | | | |

இல. X


கோபாலபிள்ளை ஜெயேந்திரா

**- நயினாதீவு வாழ் மக்கள் -**

(79202)

# நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் - 2000


தந்தை செல்வா

(01) தமிழ் மக்களின் அபிலாசைகள் அனைத்தையும் உள்ளடக்கிய காத்திரமான அரசியல் தீர்வுக்காக குரல் கொடுக்க-
(02) போரை நிறுத்தும்படி வலியுறுத்த -
(03) போரினால் அகதிகளாக்கப்பட்டு அகதிமுகாம்களில் அவதியுறும் ஆயிரக்கணக்கான மக்களின் துயரங்களை, அவர்களின் இதய உணர்வலைகளை அக்கறையுடன் எடுத்துரைக்க -
(04) உங்கள் துயரங்களை, உங்கள் மீதான அட்டூழியங்களை நேர்மையுடனும் நெஞ்சுரத்துடனும் உலகிற்கு வெளிப்படுத்த-
(05) சமாதானத்தினதும், மனித நேயத்தினதும், தமிழ்த் தேசியத்தினதும் விசுவாசமான குரலாக நாடாளுமன்றத்தின் உள்ளும் புறமும் ஒலிக்க

*உங்கள் ஆதரவை வேண்டி நிற்கின்றேன்*

| தமிழர் விடுதலைக் கூட்டணி | | X |
|---|---|---|

## க.சி.பாலகிருஷ்ணன் J.P.U.M.

சட்டத்தரணியும்
உத்தியோகப்பற்றற்ற நீதிவானும்.

*உங்கள் விருப்பு வாக்கு ஒன்றினை*
*இல. 4 க்குப் போடுங்கள்*

| 1 | 2 | 3 | X | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|


க.சி. பாலகிருஷ்ணன்

இல. X

**- வடமராட்சி மக்கள் -**

(78930)

# அன்பான அறிவிப்பு!

**காங்கேசன்துறை லங்கா சிமெந்து நிறுவன ஊழியர்கள் அனைவருக்கும்...!**

1990 ஆம் ஆண்டு முதல் உங்களுக்கு வழங்கப்படாமல் இருக்கும் சம்பள நிலுவைகள் மற்றும் கொடுப்பனவுகள் அனைத்தையும் ஐ.தே.க. ஆட்சிக்கு வந்ததும் ஒரு மாத காலத்துக்குள் வழங்கப்படும்!

கடந்த வாரம் தங்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகள் அனைத்தும் அவர்களால் நிறைவேற்ற முடியாதவை என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

*எனவே செலுத்துங்கள் உங்கள் வாக்கை*

**ஐ.தே.கவுக்கு!**

| ஐக்கிய தேசியக் கட்சி | | X | X |
|---|---|---|---|



*உங்கள் நண்பன்*

**தியாகராஜா மகேஸ்வரன்**

*(யாழ். மாவட்ட முதன்மை வேட்பாளர்)*

(C/13259)

ஸ்ரீ வைஷ்ணவி ஸ்டூடியோ
SVT

★ யாழ். பல்கலைக்கழக 19ஆவது பட்டமளிப்பு விழாவை முன்னிட்டு கொழும்பில் பிரதியாக்கம் செய்யும் படச்சுருள்களை மிகத் துரிதமாகப் பிரதியாக்கம் செய்வதற்கு விசேட ஒழுங்குகள் செய்துள்ளோம். எனவே நாளை 08.10.2000 மாலை 3 மணிக்கு முன்னர் எம்மிடம் படச்சுருள்களை ஒப்படைக்கவும்.

புலோலி T.P. 070-212720
நல்லூர் T.P. 021-2604
(79258)

# 90ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 1952 - 10 - 20
மறைவு 2000 - 07 - 10

**அமரர் கந்தையா யோகராஜா**

பாசத்தோடு எம்மை அரவணைத்து
நல்வழி காட்டிய தெய்வமே!
மாதம் மூன்று ஆனபின்பும்
ஆறவில்லை உங்கள் நினைவலைகள்.

எமது தந்தையின் பிரிவுச் செய்தி கேட்டு எமது இல்லத்திற்கு நாடி ஓடி வந்து பல்வேறு வழிகளிலும் உதவி புரிந்து 11-07-2000 அன்று நடைபெற்ற இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்ட அனைத்து அன்பு இதயங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு இன்று (07-10-2000) எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

**மனைவி, பிள்ளைகள், பெறாமகன், உற்றார், உறவினர்கள்.**

தகவல்:
வண்ணமணி (மைத்துனர்)
*தம்பாலை,*
*அச்சுவேலி.*

(79172)

# நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் - 2000

துன்பங்களைச் சுமக்கும் மக்களுக்காக
நாடாளுமன்றத்தில் குரல் கொடுக்க
என்னை ஆதரியுங்கள்!

## லிபரல் கட்சி

## சமன் இந்திரஜித்



| | X |
|---|---|
| இல. | X |

**சமன் இந்திரஜித்**

(79212)


சுரேஸ் பிரேமச்சந்திரன்

*தமிழ் மக்களை வதைக்கும் யுத்தத்தையும்*
*அவசர காலச் சட்டத்தையும் இல்லாதொழிக்க*

**தோடம்பழச் சின்னத்துக்கு வாக்களியுங்கள்!**

| சுயேச்சைக் குழு - 1 | | X |
|---|---|---|
| பசுபதி சீவரெத்தினம் (ஜீவா.கி.பி.) | இல. | X |

**ஈ.பி.ஆர்.எல்.எவ். (சுரேஸ் தலைமை)**


பசுபதி சீவரெத்தினம் (ஜீவா. கி.பி.)

(79204)



எம் இனத்தின் நிகழ்காலத்தை சில துரோகிகள் விலை கூறி விற்றிருக்கலாம்....


ஆனாலும், நாம் மனம் தளரக் கூடாது. எமது நீண்ட வரலாற்றில் நாம் சில தடவைகள் வீழ்ந்திருக்கின்றோம். ஆயினும், மீண்டும் எழுந்து நிற்க நாம் தவறியதில்லை!

# ந.சிறீகாந்தா

(வேட்பாளர் இல.1)

## நாம் மீண்டும் எழுவோம்! நிச்சயமாக! நிரந்தரமாக!!

இந்த வைராக்கியத்துடன் தேர்தல் களத்தில் – **கப்பல்** சின்னத்தில் சட்டத்தரணி ந.சிறீகாந்தா தலைமையில் ரெலோ ஆதரவுடன் போட்டியிடும் சுயேச்சைக் குழுவை ஆதரியுங்கள். வாக்குச்சீட்டில் கடைசியாக உள்ள கப்பல் சின்னத்துக்கு நேரே புள்ளடியிடுங்கள். தொடர்ந்து நீங்கள் விரும்பும் மூன்று வேட்பாளர்களின் இலக்கங்களுக்கு மேலே புள்ளடியிடுங்கள்.



| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 (X) | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | | | | | | | | |

## "ஈனப் பிறவிகள் சிலர் இனத்தை விற்பினும் மானத் தமிழினம் மண்டியிடாது!"

(78914)

# நாடாளுமன்றத் தேர்தல் 2000.10.10 - யாழ்.தேர்தல் மாவட்டம்





## எனது அன்புக்கினிய தமிழ் மக்களே!

**41 ஆண்டுகளுக்கு முன் கொழும்பு மாநகரசபைத் தேர்தலில் ஆரம்பமானது எனது அரசியல். தலைவர் ஜீ.ஜீ., தந்தை செல்வா ஆகியோரின் அன்புக்கும், பாசத்துக்கும் உடையவனானேன்.**

**கிளிநொச்சி (கரைச்சி) கிராமசபைத் தலைவராக - கிளிநொச்சி பட்டின சபைத் தலைவராக- கிளிநொச்சி நாடாளுமன்ற உறுப்பினராக சாதி, மத பேதமின்றி, சுயநலம் கருதாமல் எம் மக்களுக்கு என் கடமையாகக் கருதி தொண்டாற்றியவன் நான்.**

**எத்தனையோ சோதனைகளையும், வேதனைகளையும் தாண்டி இன்று உங்கள் முன் நிற்கிறேன்.**

* நாடாளுமன்றப் பதவியை 1983 ஆம் ஆண்டு துறந்தேன் - கட்சியின் கட்டளையை ஏற்று.
* வழக்கறிஞர் தொழிலைத் துறந்தேன் - சத்தியப்பிரமாணம் செய்ய மறுத்து.



இன்று மீண்டும் உங்கள் முன் நிற்கின்றேன் - உங்கள் பொன்னான வாக்கைக் கேட்டு.
பதவி ஆசையால் அல்ல; நம் மக்களை அரசுக்கு விலை கூறி விற்காது தடுக்க.
தீவக மக்களை குறிப்பாக நெடுந்தீவு மக்களை கொடுங்கோல் ஆட்சியிலிருந்து விடுவித்து அவர்களை சுதந்திரமாக வாழவைக்க.

- **13 ஆண்டுகள் நாடாளுமன்றில்.**
- **தந்தை செல்வாவுடன் 7 ஆண்டுகள் நாடாளுமன்றில்.**
- **தளபதி அமிருடன் நாடாளுமன்றில் 6 ஆண்டுகள்.**
- **தலைவர் சிவசிதம்பரத்துடன் நாடாளுமன்றில் 6 ஆண்டுகள்.**

சரித்திரம் படைத்த தமிழ்த் தலைவர்கள் பலருடன் பேசிப் பழகி அவர்கள் சிந்தனைகளை அறிந்தவன் நான். பதவி ஆசை, பண ஆசை இன்றி இனத்தின் விடுதலைக்காகவே உழைக்க உறுதி பூண்டு செயற்படும் என்னை நாடாளுமன்றம் அனுப்பி வைக்குமாறு பணிவுடன் வேண்டுகிறேன்.

உண்மைப் பெயரையே கூறும் யோக்கியதை இன்றி, என்னைப்பற்றி கீழ்த்தரமான துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டோ, அன்றித் தரமற்ற அசிங்கமான ஆர்ப்பாட்ட ஊர்வலங்களை நடத்தியோ அன்றி எனது கொடும்பாவி எரித்தோ என்னை அரசியலில் இருந்து அரச கைக்கூலிகளால் விரட்ட முடியாது என்பதை உறுதியாகக் கூறி வைக்க விரும்புகிறேன்.

எமது கட்சியின் சின்னமாகிய **உதயசூரியனுக்கு** அருகில் புள்ளடியிடுவதன் மூலம் வாக்களித்து, பின் உங்கள் விருப்பு வாக்குகளில் மூன்றில் ஒன்றினை எனது **இலக்கமாகிய 2 இன் மேல் (X)** புள்ளடியிட்டு என்னையும் தெரிவுசெய்யுமாறு வேண்டுகிறேன்.

**வீ.ஆனந்தசங்கரி**

**முதன்மை வேட்பாளர்,**
**மூத்த துணைத் தலைவர்,**
**தமிழர் விடுதலைக் கூட்டணி.**

(C/13252)

# கைத்தொழில் வணிகர் மன்றம்
## சாவகச்சேரி

# நன்றி நவில்கின்றோம்

பாதிக்கப்பட்ட எமது வர்த்தகர்களுக்கு உலர் உணவு பெறுவதற்கு நியாயமான முறைகளில் அனுகியும் எவ்வித பயனும் ஏற்படாத நிலையில் தனது அயராத முயற்சியால் எம் வணிகர் உலர் உணவு பெற வழிசமைத்த யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரான

**திரு. K. N. டக்ளஸ் தேவானந்தா**

அவர்களுக்கு எமது மன்றின் வணிகர்களின் சார்பில் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*கைத்தொழில் வணிகர் மன்றம்,*
*சாவகச்சேரி.*

*வணிகர் மன்றக் கட்டடம்,*
*நெல்லியடி.*

(79180)


## பாடசாலையில் பொருள்கள் மறைவு

அரியாலை,ஒக்.7

கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தில் இருந்த கணனி இயந்திரம் காணாமற் போய்விட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் பாடசாலையிலிருந்த சில தளபாடங்கள் மற்றும் பெறுமதி மிக்க பொருள்களும் காணாமல் போயுள்ளன. அத்துடன் சென்.ஜோசப் மகா வித்தியாலயத்தில் இருந்த பெறுமதிமிக்க பொருள்கள் சிலவும் காணாமற் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இப்பகுதியில் ஏற்பட்ட பதற்ற நிலையை அடுத்து மக்கள் இடம் பெயர்ந்தது தெரிந்ததே. (ஐ-17)

## தேங்காய் விலை உயர்வு

யாழ்.நகரில் தேங்காயின் விலை கடந்த சில நாள்களாக அதிகரித்து வருகிறது.ஒரு தேங்காய் பத்து ரூபா முதல் 15 ரூபா வரை விற்கப்பட்டு வருகிறது. (ஐ-17)


# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



## செல்வி பிறிந்தா அருள்நேசன்

**07–10–2000**

கனடாவில் வசிக்கும்
**அருள்நேசன் - அமுதா** தம்பதிகளின்
செல்லப் புதல்வி **பிறிந்தா**

தனது முதலாவது பிறந்த நாளை கனடாவில் உள்ள இல்லத்தில் இன்று (07.10.2000) வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை நீர்வேலியில் வசிக்கும் அம்மப்பா, அம்மம்மா, அகிலன் மாமா, அபி சித்தி, ஆவரங்காலில் வசிக்கும் சிவா மாமா,தனுஷா மாமி, மச்சான் விருஷன் ஆகியோர் இவரைப் பல்கலையும் பெற்று பல்லாண்டுகாலம் சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றார்கள்.

தகவல்:-
இ. அருந்தவநாதன்,
*நீர்வேலி வடக்கு,*
*நீர்வேலி.*

(79047)



# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
05-05-1944



உதிர்வு
29-09-1998

## திரு. நல்லதம்பி சபாரத்தினம்

திதி:07.10.2000

பண்புடையாய்! மாமுனையாய்! வெளிப்படையாய்ப் பேசுவைநீ.
உன்குடும்ப அங்கத்தவர் பலர்க்குமணம் செய்து வைத்தாய்!
உன்னூர்கோ வில்தலைவர் பொருளாளர் ஆயிருந்தாய்!
உன்படத்தை எம்மனதில் எழுதிஎழுந் தோடிவிட்டாய்!

இரண்டாண்டு சென்றிடினும் எம்துயரம் போகாது!
கரந்திரண்டு கண்களில்நீர் சிந்துவதைப் பாராயோ?
பரவெளியில் விமானத்தில் செல்கையிலே ஆபத்தில்
இறந்தகதை எம் மனதில் என்றென்றும் நீங்காது!

*நாகர்கோவில் மேற்கு,*
*நாகர்கோவில்.*

(78481)

பிரிவால் துயருறும்
**மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.**



# முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

மலர்வு
11 - 02 - 1971



மறைவு
18 - 09 - 1999

## அமரர் விஜியலட்சுமி இளமுருகன்
### (விஜியா)

திதி - 07-10-2000

அன்புமனம் கொண்டுடனே நின்றாயென்றும்
அகத்தினிலே எழில் பகர வேண்டி நித்தம்
இன்பவிளக் காகியொளி செய்தாய் நீயே!
இசைமழலை மொழிகேட்டும் மகிழ்ந்தாய் நீயே!
துன்பமென்னும் பெருங்கடலில் நாங்கள் நீந்த
துளிர்க்குமொரு நினைவலையில் விட்டேசென்றும்
இன்றுமொரு ஆண்டதுதான் மறையக்கண்டே
இருகண்ணீர் சொரிந்துமுனை அஞ்சலித்தோம்!

தகவல்:
சி.கணேசலிங்கம்(லிங்கம்),
(மாமன்)
கொல்லங்கலட்டி.

குடும்பத்தினரும்,
உற்றார், உறவினரும்.

(79116)



# பொதுத் தேர்தல் 2000 - யாழ். மாவட்டம்

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி, சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி
ஆகியவற்றின் முன்னாள் அதிபர், வடமாகாண அதிபர் சங்க
முன்னாள் தலைவர் (79-88)

## கல்வியாளர் க.அருணாசலம் (இல.6)

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் அபேட்சகராக முன்வந்துள்ளார்.
உடனடியாக யுத்தத்தை நிறுத்தி மூன்றாம் தரப்பு
மத்தியஸ்தத்துடன் பேச்சுவார்த்தைகளைக் கோர,
தமிழரின் பாரம்பரிய நிலத்தைப் பேண,
தமிழர் உரிமையைப் பெற,
குமார் பொன்னம்பலத்தின்
சேவையைத் தொடர
அவருக்கு வாக்களியுங்கள்.



மாமனிதர்

| அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் | | X |
|---|---|---|
| க.அருணாசலம் | இல. | 6 |



க.அருணாசலம்

(78946)



# நாடாளுமன்றத் தேர்தல் 2000 – யாழ். மாவட்டம்

## அபிமன்னசிங்கம் மாணிக்கசோதி - இல.3(மூன்று)

*அன்பான தமிழ்பேசும் மக்களே ! உரிமைகள் சலுகைகளல்ல,*
*அடிபணிந்து பெறும் பிச்சையுமல்ல! உரிமைகளை நிரந்தரமாக்கிக் கொள்ள,நாமே போராடவேண்டும்! தெற்கிற்கும், ஏகாதிபத்தியங்களுக்கும் ஒன்றைக் கூறியும் செய்தும் வந்துவிட்டு, யாழ். குடாவுக்கு வந்து, இன்று ஏமாற்று மொழிகள் பேசும் சந்தர்ப்பவாத, விலாங்குத் தமிழர் அணியினையும், ஏனைய தலையாட்டும் கைப்பொம்மைகளையும் நிராகரியுங்கள்! எம்முடன் இணையுங்கள்! இதய சுத்தியுடன், தலைநிமிர்ந்து செயற்படுவோம்! வெற்றி காண்போம்!*



குமார் பொன்னம்பலம்

## அபிமன்னசிங்கம் மாணிக்கசோதி
## அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | X | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | | | | | | | | |



அபிமன்னசிங்கம்
மாணிக்கசோதி

(78922)


## பஸ்சேவை நடத்த கோரிக்கை

இன்று ஆரம்பமாகவுள்ள யாழ். பல்கலைக்கழகத்தின் வணிகவியல் வெளிவாரிப் பரீட்சையை முன்னிட்டு பருத்தித்துறை - யாழ்ப்பாணம் பஸ் சேவையைத் தடையின்றித் தொடர்ந்து நடத்துமாறு பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்கு மகஜர் ஒன்றை அனுப்பிவைத்துள்ளனர்.

இப்பரீட்சைக்கு வடமராட்சிப் பகுதியில் இருந்து சுமார் 100 மாணவர்கள் தோற்றவுள்ளதால் அவர்கள் தமது போக்குவரத்தை மேற்கொள்வதற்கு வசதியாகவே கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஐ-10)

## சான்றிதழ் வழங்கல்

உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயத்தில் கணனிப் பயிற்சி பெற்று வெளியேறிய 60 மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. அகதிகள் புனர்வாழ்வுக் கழகமும், சிறுவர் பாதுகாப்பு நிறுவனமும் இணைந்து இதனை நடத்தின. (ஐ-72)



## நாடாளுமன்றப் பொதுத் தேர்தல்
2000-10-10

**யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டம்**

தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளரான
தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச்
சங்கத் தலைவர்

**திரு.சி.சிவமகாராசா**

அவர்களை ஆதரியுங்கள்.



இல. 11

| தமிழர் விடுதலைக் கூட்டணி | | X |
|---|---|---|

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 11 (X) | 12 | | | | | | | | |

உதயசூரியன் சின்னத்துக்கு நேரே புள்ளடியிட்டும் இலக்கம் **11**க்கு மேலே புள்ளடியிட்டும் வெற்றிபெறச் செய்வதுடன் மேலும் விரும்பிய இரு இலக்கத்திற்கு மேல் புள்ளடியிடலாம்.

(78916)

# ஈழப் போராட்டம் குறித்த நூல்கள் மதுரையில் வெளியீடு!

தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன் எழுதிய 'தமிழீழமும் வங்கமும்' 'பாலஸ்தீன விடுதலைப் போராட்டமும் தமிழீழ விடுதலைப் போராட்டமும்' ஆகிய நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. மதுரையில் நடைபெற்ற தமிழர் தேசிய இயக்கத்தின் மாநாட்டில் இந்நூல்கள் வெளியிடப்பட்டன. தமிழ் நாட்டில் உள்ள இலங்கைத் தமிழர்களை சிறப்பு முகாம்களில் அடைக்க எதிர்ப்புத் தெரிவித்தும் இம் மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மாநாட்டுத் தீர்மானங்கள் வருமாறு:-

கர்நாடகம், தமிழகம் இடையே உள்ள பிரச்சிகைளை நடிகர் ராஜ்குமாரை கடத்திச் சென்றால் மட்டும் தீர்க்க இயலாது. எனவே வீரப்பன் ராஜ்குமாரை விடுவிக்க வேண்டும்.

✪ தமிழகத்தில் தமிழ் ஆட்சி மொழி, பயிற்று மொழியாகவும், நீதிமன்ற மொழியாகவும் நடைமுறைப் படுத்த வேண்டும்.

✪ காலாவதியான தடாச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களை விடுவிப்பதுடன் சாதாரண குற்றவியல் சட்டத்தின் கீழ் விசாரிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

✪ ஐ.நா.சபையின் அகதிகள் குறித்த உடன்பாட்டில் இந்தியா கையெழுத்திட வேண்டும். இந்தியாவில் தங்கியுள்ள இலங்கைத் தமிழர்களை முகாம்களில் அடைப்பதைக் கைவிட்டு அவர்களுக்கு உரிமைகள் அளிக்க வேண்டும். அவர்களின் விருப்பம் இன்றி திருப்பி அனுப்பக் கூடாது. (ஐ-4)



## அமரர் மாமனிதர் குமார் பொன்னம்பலம்

- இறுதி மூச்சு வரை, சிங்கத்தின் குகையிலே துணிந்து நின்று எமது தமிழ் இனத்தின் இடர் களையவும், எம் இன விடுதலைக்காகவும் பாடுபட்ட அமரர் மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் கட்சியே, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ். அவர் சென்ற வழியில் தொடர்ந்து செயற்பட இப் பொதுத் தேர்தலில் ஐந்து மாவட்டங்களில் இக்கட்சி போட்டியிடுகின்றது.

பேரினவாத அரசாங்கங்களிடம் விலைபோகாமல், உங்களுக்கு விசுவாசமாக, நேர்மையாக, எமது மறைந்த தலைவரின் வழியில் செயற்படுவோம் என உறுதி கூறுகின்றோம்!

எமது **சைக்கிள்** சின்னத்துக்கு நேரே புள்ளடியிட்டு எமது வேட்பாளர்களைத் தெரிவு செய்யுங்கள்.

| அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் | | X |
|---|---|---|


அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் அரசியல் குழு

(78925)


## அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்

நாடாளுமன்றப் பொதுத்தேர்தல் - 2000

யாழ்.மாவட்டம்



| | X |
|---|---|
| இல. | 2 |



தமிழினத்திற்காய் தன்னுயிர் நீத்த
அமரர் மாமனிதர்
குமார் பொன்னம்பலம்

அப்பாத்துரை
விநாயகமூர்த்தி
சட்டத்தரணி, தலைவர்,
அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்.

"தமிழன் என்று சொல்லடா தலைநிமிர்ந்து நில்லடா"

(78917)

வேண்டாம் வேண்டாம் வேண்டாம் வேண்டாம் வேண்டாம் வேண்டாம் வேண்டாம் வேண்டாம் வேண்டாம் வேண்டாம் வேண்டாம் வேண்டாம்

# வேண்டாம்
# வன்முறை

தேர்தல் வன்முறையைக் கண்காணிப்பதற்கான நிலையம் (தே.வ.க.நி)

**ஜனநாயகத்தை காக்க வன்முறைக்கெதிராக வாக்களியுங்கள்**

## தந்தை செல்வா நற்பணி மன்றம், கொழும்புக் கிளை.

பொதுத் தேர்தல் - 2000

✪ வடக்கு, கிழக்கு தமிழ்பேசும் இனம் சுயநிர்ணய உரிமையுடன் வாழ -

✪ வடக்கு கிழக்கு மாகாணம் இணைந்து ஒரு மாநிலமாக இருக்க -

✪ தந்தை செல்வாவின் சமஷ்டியை நிலைநாட்ட -

உங்கள் பொன்னான வாக்குகளை உதயசூரியனுக்கு இட்டு முழுப் பிரதிநிதிகளையும் நாடாளுமன்றம் அனுப்ப வேண்டும்.

X

தந்தை செல்வா நற்பணி மன்றம்
தலைவர் - S.K. தளையரட்ணம்
*(யாழ்நகர் முன்னாள் கணித ஆசிரியர், அகில இலங்கை சமாதான நீதிவான்)*

(C/13251)

# நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் – 10.10.2000

# யாழ். தேர்தல் மாவட்டம்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்





தந்தை செல்வா



**வீ.ஆனந்தசங்கரி**
(முதன்மை வேட்பாளர்)
வேட்பாளர் இலக்கம் **2**

**சோ.சேனாதிராசா**
(மாவை)
வேட்பாளர் இலக்கம் **12**

யாழ் தேர்தல் களத்திலே 20 கட்சிகள் நின்றாலும் தந்தை செல்வா உருவாக்கிய தமிழர் விடுதலைக் கூட்டணிதான் தமிழ்நெஞ்சங்களில் நிலைத்து வென்று நிற்கின்றது.

தந்தை செல்வா வழியில் தமிழர் விடுதலைக் கூட்டணி வகுத்த கொள்கைகளில் தலை போனாலும் நிலை குலையாது விலை போகாது நின்று -

தமிழர் துன்ப துயரங்கள் நீங்கிடவும் -

தமிழினத்தின் விடிவுக்காக உழைத்திடவும் -


தமிழர் தாயகத்தின் மீட்சிக்காக - தமிழ் மக்களின் விடுதலைக்காக - தமிழர் தம்மைத் தாமே ஆள்வதற்காக - செயலாற்றவும் -


ஜனநாயக வழிகளில் போராடவும் -

தமிழ் மக்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியை ஆதரிக்க வேண்டுகிறோம்.

யாழ்.மக்கள் பிரதிநிதிகளாகத் தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர்களையே தெரிவு செய்து வெற்றி பெற வையுங்கள்!

**உதயசூரியன் சின்னத்துக்கே வாக்களித்து**
**தமிழர் விடுதலைக் கூட்டணியை வெற்றி பெறச் செய்யுங்கள்!!**





(78950)

– நல்லூர்த் தொகுதி தமிழ் ஊழியர்கள்.




அப்துல் அலி சுல்தான் மொஹிதீன்

1



ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி

2



கதிர்காமநாதர் ஜெயக்குமார்

3

# சுயேச்சைக் குழு - இல. 3 ஸ்ரீ ல.சுதந்திரக்கட்சி

## சந்திரிகாவின் ஏகப் பிரதிநிதிகள் நாமே!



கனகசிங்கம் செல்வராஜா

4



வேல்முருகு தங்கராஜா

முதன்மை வேட்பாளர்

11



கிருஷ்ணசாமி முத்துக்குமார்

5



ஜயந்தி பரமலிங்கம்

6



தங்கராசா தேவகுலநாயகம்

7





தாமோதரம்பிள்ளை சண்முகநாதன்

8



மார்க்கண்டு துரைராசா


9

- மக்கள் தீர்மானித்து விட்டார்கள் வெற்றி நமதே!
- மக்கள் அலை எம் பக்கமே!
- எங்கள் வெற்றி மக்கள் வெற்றி! மக்கள் வெற்றி எங்கள் வெற்றி!!



முருகேசு அற்புதராசா

10



சின்னையா சிவஞானம் (சுசிதர்)

12

(79298)

## நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் - 2000



வீ.ஆனந்தசங்கரி
இல. 2
கூட்டணியின் சிரேஷ்ட துணைத் தலைவரும் முதன்மை வேட்பாளரும்



மு.சிவசிதம்பரம்
தலைவர் தமிழர் விடுதலைக் கூட்டணி



ச.அரவிந்தன்
இல. 1
கூட்டணியின் மத்திய குழு உறுப்பினரும் யாழ்.மாநகர சபை உறுப்பினரும்

தலைவர் சிவாவின் மண்ணில் பிறந்து அவரின் ஆசியுடன் தமிழர் விடுதலைக் கூட்டணியின் வேட்பாளராகப் போட்டியிடும் என்னையும் எமது தலைவரும் கூட்டணியின் முதன்மை வேட்பாளருமாகிய வீ.ஆனந்தசங்கரி அவர்களையும் ஆதரித்து நாடாளுமன்றம் அனுப்பி வைக்குமாறு பணிவன்புடன் வேண்டுகிறேன்.

### தமிழர் விடுதலைக் கூட்டணி

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ~~1~~ | ~~2~~ | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | | | | | | | | |

(79206)



## ராஜா
(யாழ்ப்பாணம்)

விஜய், ஜோதிகா
மற்றும் பலரின் நடிப்பில்

### குஷி

காட்சிகள்: 10.30, 2.00 (பு.நே)
(C/13207)



## நாகம்ஸ்
(சுன்னாகம்)

இன்று முதல்
பிரசாந்த், ரம்பா,
லிவிங்ஸ்டன், ராதாரவி
நடித்த

### பூமகள் ஊர்வலம்

(ரீல்ஸ்)
காட்சிகள்: 11.00, 2.30 (பு.நே.)



## நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் - 10.10.2000



தங்கராஜா தேவகுலநாயகம்
யாழ்.மாவட்ட ச.நீதிவான்

~~7~~

எமது வாக்காளப் பெருமக்களே...!

* எமது வெற்றிக்காக....!
* சிறுபான்மைத்தமிழர் மகாசபையின் ஆதரவை கோருகிறேன்..!
* திருவள்ளுவன் மகாசபையின் ஆதரவைக் கோருகிறேன்...!
* அன்று ஸ்ரீமாவோ எமது வாழ்வை வளம்படுத்தினார்....
* அன்று எம்.சி.சுப்பிரமணியத்தை நாடாளுமன்ற உறுப்பின ராக நியமித்து எமது நலன்கள் பாதுகாக்கப்பட்டன..
* இன்று எமக்கு சந்திரிகா சந்தர்ப்பம் கொடுத்துள்ளார்.
* எனது வெற்றிக்கு உங்கள் பேராதரவை நாடி நிற்கின் றேன்.

எமது சின்னம் தொலைபேசிக்கும் எனது இல. 7 இற்கும் எமது முதன்மை வேட்பாளர் வேல்முருகு தங்கராசாவின் வெற்றி இல. 11 இற்கும் உங்கள் வாக்குகளைத் தருமாறு அன்புடன் கேட்கின்றேன்.



வேல்முருகு தங்கராசா
யாழ்.மாவட்ட ச.நீதிவான்

~~11~~

### சுயேச்சைக் குழு. 03 (ஸ்ரீல. சுதந்திரக் கட்சி)
### சந்திரிகாவின் ஏகப் பிரதிநிதிகள் நாமே!

(79208)



## நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் - 10.10.2000

### சுயேச்சைக் குழு. 03





அ.ஜெயந்தி
(அ.இ.ச.நீதிவான்), சமூகசேவையாளர் (நெடுந்தீவு திரு.த.அம்பலம் J.P.அவர்களின் மகள்)

வேல்முருகு தங்கராசா
(அ.இ.ச.நீதிவான், பிரதம அமைப்பாளர் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, மத்தியகுழு உறுப்பினர் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, முதன்மை வேட்பாளர்)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | ~~6~~ | 7 | 8 | 9 | 10 |
| ~~11~~ | ~~12~~ | | | | | | | | |

(79207)

எனதன்பான மக்களே!

எமது பெண்ணினத்திற்கு ஒளியேற்றலாம் எனும் இலட்சியத்துடன் உங்கள் முன் நான் வந்த பொழுது, எனது படங்களையும், பிரசுரங்களையும், முக்கிய தேர்தல் ஆவணங்களையும் எமது பிறந்த மண்ணான நெடுந்தீவிலேயே வைத்து, எமது மக்களை அழிக்கவென அனுமதி பெற்று செயற்பட்டுக் கொண்டிருக்கும், ஜனநாயக வழிவந்த கட்சியெனக் கூறும் ஆயுதக்குழுவால் எரிக்கப்பட்டிருப்பது எமது மக்களையே எரிப்பார்கள் என்பதற்குரிய அறிகுறி. இவர்களுடன் மக்கள் சேருவார்களானால் எமது இனத்திற்கே வெட்கக்கேடானதாகும். எமது சின்னமாகிய தொலைபேசிக்கு நேரே (X) புள்ளடி இடுவதுடன், எனது வெற்றி இலக்கம் 6இற்கும் புள்ளடி இடுவதுடன் எமது குழுவின் முதன்மை வேட்பாளரின் இலக்கம் 11 இற்கும் இடுவதுடன் மேலதிக ஒரு வாக்கை எமது குழுவில் நீங்கள் விரும்பும் இலக்கத்திற்கும் புள்ளடி இட்டு எமது இலட்சியத்தை நிறைவேற்றுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

### விதவைகளின் நலனே எனது சேவைகளின் இலட்சியமாகும்

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

கடைகளுக்கு அல்லது வீடுகளுக்குத் தேவையான ஷோக் கேஸ், அலுமாரி,கதிரைகள்,கட்டில், ஸ்கிறின்மறைப்பு விற்பனைக்குண்டு. தொடர்பு: டின்ஸ்ரோர் உடுவில். (C/13256)

**Hero Honda CD 100ss** மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.67, செட்டித்தெரு, நல்லூர். (79041)

நல்ல நிலையிலுள்ள **Pionner box, Pionner Cassette Player, NEC Ampliwire, NEC Cassette Player,NEC tunner (Japan)** விற்பனைக்குண்டு. தொடர்பு: S.அமலன், 18/2, கோயில ஒழுங்கை, நாவாந்துறை யாழ்ப்பாணம். (79168)

பொமனேரியன் வெள்ளைநிற, மண்நிற, கறுப்பு நிற நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: ப.கஜேந்திரா, பொன்னாலை வீதி, மானிப்பாய். (பழைய தபாற்கந்தோர் அருகில்). (79176)

2 மாதம் நிரம்பிய டாசோன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 235/7, பருத்தித்துறைவீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (79090)

## இலக்கியக் கட்டுரைகள்

2000 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படுகின்ற **O/L** சாதாரண பாடத்திட்டத்திற்கு அமைவாக சிறுகதைகள், நாடகங்கள், நாவல் எல்லாவற்றிற்கும் இலக்கிய விமர்சனம் எழுதியிருக்கிறார் அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை. (79182)

## சோதிடர்

மட்டுவில் சோதிடர் அச்சுவேலி ஆஸ்பத்திரி மணியம் வீட்டில் சோதிடம் பார்த்தவர் தற்போது S. ஐயக்கோன் (ஸ்ரீதர் தியேட்டர் பின் பக்கம் 3ஆம்வீடு), 18/3,கலைப்புலவர் வீதி, யாழ்ப்பாணம். எனும் முகவரியில் வாடிக்கையாளர்கள் வந்து சந்திக்கலாம். (79179)

## வீடு வாடகைக்கு

சங்கானை மேற்கில நாற்சார்வீடு (பெரியது) வாடகைக்குக் கொடுக்கப்படும். தொடர்பு: த. இராமநாதன் (ஆசிரியர்), பூம்பற்றை வீதி, வடலியடைப்பு, பண்டத்தரிப்பு. (79177)

## தவறிவிட்டது

சி. சரவணபவானந்தன் என்பவரது தேசிய அ.அட்டை (532893127v), விசேட அ.அட்டை இரண்டும் திருநெல்வேலி சந்தைப் பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தோர் தயவுசெய்து கல்வியங்காடு சந்தையில் உள்ள பிரபா ஸ்ரோர்ஸில ஒப்படைந்து உதவவும். (79135)

விளானை, களபூமி, காரைநகர் எனும் இடத்தைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சின்னம்மா என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல. 246140219v) 27-09-2000 அன்று கல்லுண்டாய் பொன்னாலை வீதிக்கும் கலட்டிக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் வே. பாலசுப்பிரமணியம் இல. 56, சீனியர்லேன், கலட்டி, யாழ்ப்பாணம். எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (79159)

அச்சுவேலியைச் சேர்ந்த அப்பாத்துரை செந்தூரன் என்பவரது தேசிய அடையாள அட்டையும் விசேட அடையாள அட்டையும் யாழ்ப்பாணத்துக்கும் கோப்பாய்க்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 416, ஸ்ரான்லி வீதியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (79186)

செல்வி விஜிதா விக்னேஸ்வரமூர்த்தி ஆகிய எனது தேசிய அடையாளஅட்டை (இல.795942424v), விசேடஅடையாள அட்டை, பல்கலைக்கழக மாணவர் அடையாள அட்டை (98/SID/22) ஆகிய மூன்றும் **Purse** உடன் கோணாவளை வைரவர் ஆலயம், கொக்குவிலுக்கு முன்னால் 05-10-2000 அன்று தவறவிடப்பட்டுவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவு செய்து பல்கலைக்கழக கருமபீடத்தில் or விக்னேஸ்வரமூர்த்தி,நீர்வேலிமத்தி, நீர்வேலி எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (79163)

## நாடகமும் அரங்கியலும்

பகுதி Iற்கான பிரிவு Iஇன் வினா விடைகள்(200) அடங்கியதாக வெளிவந்து விட்டது. ஆசிரியர்: **M.M.** மயூரதாஸன். சகல இடங்களிலும் பெற்றுக் கொள்ளலாம். (79191)

## படிவம்

யாழ்.தொழில்நுட்பக்கல்லூரிக்கான படிவம் விற்பனையாகின்றது. விலை ரூபா 2/-. விவரம் எம்மிடம் பார்வையிடலாம். விவரம் விற்பனைக்கும் உண்டு. நாயகபாலன். மானிப்பாய். (79034)

## DISSERTATION BINDING

பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வுக் கட்டுரைகள், பல்கலைக்கழக நடைமுறைகளுக்கு அமையக் கட்டிக் கொடுக்கப்படும். (இரு பிரதிகள் கட்டுவதற்கான கட்டணம் ரூபா 350/-). தொடர்பு: பாரதி, 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 3081. (C/13122)

## பெற்றுக் கொள்ளவும்

மீசாலை வடக்கு, பூதவராயர் கோயிலடியில் இயங்கி வந்த "விஜோஜா" தையலகம் தற்பொழுது மாலுசந்தி, வதிரி றோட்டில் இயங்குவதனால் ஏற்கனவே எம்மிடம் தையலுக்கு வழங்கிய ஆடைகளை மீளப் பெறுமாறு வேண்டுகின்றேன். (79188)


# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



## கிருஷ்ணராஜா அபிஷேக்

கிருஷ்ணராஜா - ராதிகா தம்பதிகளின் செல்வப் புதல்வன்

## அபிஷேக்

தனது முதலாவது பிறந்த நாளைக் கனடாவில் வெகுவிமரிசையாக கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா, ஆசை அம்மா, கொக்குவிலில் வசிக்கும் பூட்டன் நடராசா, அப்பம்மா, சித்தப்பாமார்களான மிகிரானன், கருணராசா, அத்தை தேவநாயகி ஆகியோரும் இதே இடத்தைச் சேர்ந்த தியாகராசா -- மங்களநாயகி தம்பதிகள், மச்சாள்மார்களான சுகந்தனா, பிரியந்தனா, பவித்திராவும், மச்சான் தவலக்ஷன் ஆகியோரும் செல்வராசா --தேவராணி குடும்பம், திருகோணமலையில் வசிக்கும் தங்கவேல் குடும்பத்தினர், இளைய அப்பப்பா குடும்பத்தினர், திருகோணமலை தர்மபாலா --சாந்தினி, பிரவீதா குடும்பத்தினர், நல்லூரில் வசிக்கும் அம்மம்மா குடும்பத்தினர், கனடாவில் வசிக்கும் மெய்யழகன், வேதநாயகி குடும்பத்தினர், மச்சான் ஜனகன், மச்சாள் அஞ்சலா ஆகியோரும் உற்றார் உறவினர்களும் அபிஷேக் பல்கலையும் பெற்று பல்லாண்டுகாலம் நீடூழி வாழ்கவென்று வாழ்த்தி முருகனை வேண்டுகிறார்கள்.

தியாகராசா - மங்களா குடும்பத்தினர்
கொக்குவில் கிழக்கு.
(79174)



# நலம் தரும் நடவடிக்கைகள்

உலக உளநல நாள் ஒக். 10

## 7. எதையும் படைப்பாக்கத் திறனுடன் செய்தல்



ஆக்கத் திறனோடு கருமங்களைச் செய்தல் உற்சாகத்தையும், தன்னம்பிக்கையையும் தரும். கலைகள் யாவும் கவலையைப் போக்கும்.

இசை, இலக்கியம், சித்திரம், சிற்பம், சிறுதோட்டம் செய்தல், சமையல் என எதையும் நீங்கள் பரீட்சித்து மகிழலாம்.



உ
தில்லையம்பதியாள் துணை

# மேல் நிலை அருள்வாள் ஓம் சக்தி ஓம்

அன்னை பராசக்தி ஓம் சக்தி ஓம்
ஆதி சிவசக்தி ஓம் சக்தி ஓம்
இம்மை நலம் தந்தாள் ஓம் சக்தி ஓம்
ஈந்தவருக்கு அருள்வாள் ஓம் சக்தி ஓம்
உமையவள் திரிசூலி ஓம் சக்தி ஓம்
ஊழித் தவக்காளி ஓம் சக்தி ஓம்
எம்மையும் ஆட்கொண்டாள் ஓம் சக்தி ஓம்
ஏற்றங்கள் அருள்வாள் ஓம் சக்தி ஓம்
ஐஸ்வரிய பூரணி ஓம் சக்தி ஓம்
ஒருமையில் ஓங்கும் ஓம் சக்தி ஓம்
ஓங்காரி பைரவி ஓம் சக்தி ஓம்
ஔவியம் தீர்த்தாள் ஓம் சக்தி ஓம்
ஆனந்தம் சேர்த்தாள் ஓம் சக்தி ஓம்
பர்வதக்குமரி ஓம் சக்தி ஓம்
பார்வையில் அருள்வாள் ஓம் சக்தி ஓம்
சிவகாமித் தாயே ஓம் சக்தி ஓம்
மேல் நிலை அருள்வாள் ஓம் சக்தி ஓம்





ஆக்கம்:
கலைமாமணி ரீ.எம்.சௌந்தராஜன்

தில்லையம்பதியில்
இன்று விஜயதசமி மானம்பூ திருவிழா.

NANTHA Graphics (N/G)



# நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் - 2000

தென்மராட்சிப் பகுதியில் இருந்து உடைமைகளுடன்
இடம் பெயர முடியாது படையினரின் பிடியில்
சிக்கித் தவித்த எம்மை அங்கிருந்து உடைமைகளுடன்
வடமராட்சிப் பகுதிக்கு அழைத்து வந்த
ஐக்கிய தேசியக்கட்சி வேட்பாளர்களுக்கு
எமது நன்றிகள்.

இக்கட்டான நிலையில் எமக்கு உதவிபுரிந்த
ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர்களை
நாம் ஆதரித்து பெரும் வெற்றிபெறச் செய்வோம்.



தி.மகேஸ்வரன்

ஐக்கிய தேசியக் கட்சி | X | 4

தென்மராட்சி வாழ் மக்கள்

(C/13255)

# நாடாளுமன்ற பொதுத் தேர்தல் 2000 - யாழ்.மாவட்டம்

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்
குமாரின் வழியில் சென்றிட
தமிழ் மக்களின் போராட்டம் வெற்றிபெற
யுத்தத்தை நிறுத்தி நிரந்தர தீர்வைக் கொண்டுவர
45 வருட பொதுச் சேவையும் கட்சி அனுபவமும் கொண்ட
என்னையும் எமது கட்சியையும் ஆதரியுங்கள்.


மாமனிதர்

 X

விஜயரத்தினம் இரத்தினராசா இல.11

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ~~11~~ | 12 | | | | | | | | |


விஜயரத்தினம் இரத்தினராசா

(79201)



# யாழ்.மாவட்டம் - பொதுத் தேர்தல் - 2000

உலக நாடுகளின் உதவியுடன் வடக்கும் கிழக்கும் இணைந்த தமிழர் தாயகத்தில் சுயநிர்ணய உரிமையுடன் கூடிய ஆட்சி அமைத்திட தமிழர் விடுதலைக் கூட்டணிக்கே வாக்களியுங்கள்.


தந்தை செல்வா

~~3~~  X

| 1 | 2 | ~~3~~ | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 11 | 12 | | | | | | | | |

இப்பணியில் நானும் இணைந்திட எனது இலக்கமாகிய மூன்றுக்கும் ~~3~~ வாக்களியுங்கள். துயரப்படும் மக்களினதும் ஏழைகளினதும் பிரதிநிதியாக நான் தொடர்ந்தும் செயற்பட என்னைத் தெரிவுசெய்யுங்கள். சகல அன்பு உள்ளங்களுக்கும் எனது நன்றிகள்.

அன்றும் இன்றும் என்றும் மக்கள் சேவகன்


P.F. சேவியர்

(79211)


## பிரதேச சபை அலுவலகம் இடம் மாற்றம்

தென்மராட்சி,ஒக்.7

நெல்லியடி பழைய ஆஸ்பத்திரி வீதியில தற்காலிகமாக இயங்கிவந்த சாவகச்சேரி பிரதேச சபை தலைமை அலுவலகம நேற்று முன்தினம் முதல் கோண்டாவில் இருபாலை வீதியில் உள்ள கட்டடமொன்றுக்கு மாற்றப் பட்டுள்ளது. (ஐ-117)

## ஓய்வூதியம் வழங்கல்

வண்ணார்பண்ணை,ஒக்.7

இலங்கை வங்கியின் சாவகச்சேரிக் கிளையில் ஓய்வூதியம பெறுபவர்கள் நாளைமறுதினம் திங்கட்கிழமை மானிப்பாயில் இயங்கும் இலங்கை வங்கிக் கிளையில் தமது ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொள்ளலாமென வங்கி முகாமையாளர் அறிவித்துள்ளார். (ஐ-74)

## பிரதேச செயலகம் இடம் மாற்றம்

வண்ணார்பண்ணை,ஒக்.7

இணுவில மக்லியொட் வைத்திய சாலையில் இதுவரை இயங்கி வந்த தென்மராட்சி பிரதேச செயலகம் தற்பொழுது வைத்தியசாலையின் மேற்குப் புறமுள்ள வைத்திய சாலைக்குச சொந்தமான கட்டடத்தில் இயங்கி வருகிறது. (ஐ-74)

## நவராத்திரி பூசைக்கு ஏற்பாடு

அரியாலை,ஒக்.7

கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயம், இந்து இளைஞர் மன்றம் ஆகியவற்றில் இன்று சனிக்கிழமை நவராத்திரி பூசையை நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகப் பரிபாலன சபைத் தலைவர் க.செந்தில்குமரன் தெரிவித்தார்.

கொழும்புத்துறை இந்து இளைஞர், மன்ற அலுவலகத்தில் இன்று பிற்பகல் 1மணி தொடக்கம் 2 மணி வரை மன்றத் தலைவர் வ.பிரதாப் தலைமையிலும் 2 மணி தொடக்கம் 3 மணிவரை மேற்படி ஆலயத்திலும் விசேட பூசை வழிபாடுகளுடன் நவராத்திரிவிழா கொண்டாடப்படவுள்ளது. (ஐ-17)


# நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் - 2000


கதிரவேற்பிள்ளை சுதாகரன
(சுதாமாஸ்டர்)
இல.3

தமிழ் பேசும் மக்களுக்கு!
ஈரோஸ் அமைப்பின் அன்பான வேண்டுகோள்
தமிழ் மக்கள் ஒன்று பட்டு
சர்வதேச மத்தியஸ்தத்தை வலியுறுத்தி
கௌரவத்துடன் கூடிய நிரந்தர
சமாதானம் கிட்டிட
எம்மை ஆதரியுங்கள்


தர்மலிங்கம் சித்தார்த்தன்
இல.5

 X

# ஈரோஸ், யாழ்.மாவட்ட அமைப்பு.

(79205)

## சாவகச்சேரி தேசிய சேமிப்பு வங்கி யாழ்ப்பாணத்தில் இயங்கும்!

சாவகச்சேரி தேசிய சேமிப்பு வங்கியின் ஆவணங்கள் கடந்த வாரம் மீட்கப்பட்டதையடுத்து அடுத்தவாரம் முதல் யாழ்ப்பாணத்தில் அது முழுமையாகச் செயற்படவுள்ளது.

யாழ்ப்பாணம் தேசிய சேமிப்பு வங்கி அமைந்துள்ள கட்டடத்தின் மேல்மாடியில் சாவகச்சேரி தேசிய சேமிப்பு வங்கி இயங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-117)

## சர்வதேச மன்னிப்புச்சபை கண்டனம்

இலங்கையில் பொதுத்தேர்தல் அண்மித்துவரும் இந்தக் காலப் பகுதியில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் தற்கொலைக் குண்டுத்தாக்குதல்கள் குறித்து சர்வதேச மன்னிப்புச்சபை கண்டனம் தெரிவித்துள்ளது.

இந்த அமைப்பு இந்த வாரம் மூதூர் பகுதியில் இடம்பெற்ற தற்கொலைக்குண்டுத் தாக்குதலைக் கண்டித்திருந்தது.தற்பொழுது மதவாச்சியில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத்தாக்குதலையும் அது கண்டித்துள்ளது.

நாடாளுமன்றத் தேர்தல் அண்மித்துவரும் இக்காலப்பகுதியில் இலங்கையின் ஜனநாயகத்துக்கு ஊறு விளைவிக்கும் வகையிலும், மனித உயிர்களை பொருட்டாக எண்ணாமலும் - இலங்கையில் இடம்பெற்றுவரும் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் கண்டனத்துக்குரியவை என்று சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.(இ-8)

## கூட்டங்கள் நடத்த இன்று இறுதி நாள்

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்கான அரசியல் கட்சிகளின இறுதிப் பிரசாரக் கூட்டங்கள் இன்று தென்னிலங்கையில் நடைபெறவுள்ளன.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் கூட்டம் காலி மாவட்டத்திலுள்ள ஜமனப் பாலத்துக்கு அருகில் நடைபெறும். பிரதமர் ரத்னசிறி விக்கிரம நாயக்க, கல்வி உயர்கல்வி அமைச்சர் றிச்சர்ட் பத்திரன மற்றும் பிரதி அமைச்சர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்வர்.

ஐ.தே.கட்சியின் பிரசாரக் கூட்டம் இன்று இரவு 7 மணிக்கு மருதானையில் இடம்பெறும். எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இதில் கலந்து கொள்வார். ஜே.வி.பி. மற்றும் முன்னணிக்கட்சிகளின் கூட்டங்கள் கொழும்பின் புறநகர்ப் பகுதிகளில் நடைபெறும். (இ-7)


## நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் - 2000

- செம்மணியில் 600 தமிழ் இளைஞர்கள், யுவதிகள் கொன்று குவிக்கப்பட்டதனை வெளிக்கொணர்ந்த பத்திரிகையாளர் எஸ்.ஸ்ரீகஜனை ஆதரிப்போம்.
- சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி கிருஷாந்தி குமாரசாமி பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டமை, புங்குடுதீவில் சாரதாம்பாள், கோண்டாவிலில் ரஜனி வேலாயுதம் ஆகிய யுவதிகள் காம இச்சைக்கு உள்ளாக்கப்பட்டமைக்கு பத்திரிகை வாயிலாக கடும் எதிர்ப்புத் தெரிவித்து அவற்றை வெளிக்கொணர்ந்தவர்களில் ஒருவரான ஸ்ரீகஜனை வெற்றிபெறச் செய்வோம்.


எஸ்.ஸ்ரீகஜன் (பத்திரிகையாளர்)

| இலக்கம் | 8 | ஐக்கிய தேசியக் கட்சி | | X |
|---|---|---|---|---|

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 11 | 12 | | | | | | | | |

ஸ்ரீகஜனை பெரு வெற்றிபெறச் செய்வோம்

(79216)



## நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் - 2000

யாழில் நின்றும் என்றும்
சேவை செய்யக் கூடிய
எமது நண்பன் க.நந்தகுமாரனை
பெரு வெற்றி அடையச் செய்வோம்.



| ஐக்கிய தேசியக் கட்சி | | X | இல. 2 |
|---|---|---|---|

(79215) யாழ்.குடாநாட்டு வர்த்தக நண்பர்கள்



## சிமெந்து விலை மாற்றம்

டோக்கியோ சிமெந்து கம்பனியின் சிமெந்து விலை ஏற்றத்தினால் மிற்சுயி, அட்லஸ் சிமெந்துகளின் விலைகளும் உயர்ந்துள்ளன என்பதை எமது வாடிக்கையாளர் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

புதிய விலை:

அட்லஸ் பக்கற் ஒன்று 540 ரூபா (200 பக்கற்றுகளுக்கு)
மிற்சுயி பக்கற் ஒன்று 575 ரூபா (200 பக்கற்றுகளுக்கு)

### ஜெசிபா ஏஜென்சி

132, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P: 2407

(C/13265)



## நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் - 2000


முத்துத்தம்பி கனகசுந்தரம் (உடையார், சுருவில்)

இலங்கை வாழ் மக்கள்
என்றும் அமைதியாய் வாழ
யாழ்.மக்கள் தரைவழியாய்
இலங்கையைச் சுற்றிட
இடம் பெயர்ந்த மக்களுக்கு
புனர்வாழ்வு அளித்திட

| | X |
|---|---|
| இல. | 7 |

ஐக்கிய தேசிய கட்சிக்கு வாக்களித்து
இல.7 இற்கு புள்ளடி இட்டு
எனது வெற்றிக்கு வாக்களியுங்கள்!

(79210)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையின் பழைய மாணவரும், முன்னாள் பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளரும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புவியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளருமான

திருவாளர்
S.T.B. இராஜேஸ்வரன்

அவர்கள் கலாநிதிப் பட்டம் பெற்றமையையிட்டு மனமுவந்து பாராட்டுவதோடு நீடுகாலம் குடும்பத்தினரோடு சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.

யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை.

(C/13266)



## சுயேச்சைக்குழு - இல.3 (ஸ்ரீல.சு.கட்சி)

என் அன்பார்ந்த வாக்காளப் பெருமக்களே!

என்னைத் தனி வாழ்விலும், பொது வாழ்விலும் அறிந்தவர்கள் பலர். உங்கள் எல்லோரையும் தனித்தனியாகச் சந்திக்கவேண்டும் என்பதே எனது அவா. காலத்தின் கோலத்தால் அது மிகவும் சிரமமாகியுள்ளது. முடிந்தவரை உங்களைச் சந்திக்கின்றேன். தனிப் பட்ட ரீதியிலும், சுதந்திரக் கட்சி சார்பிலும் உங்களது பொன்னான வாக்குக ளைக் கோரி நிற்கின்றேன். என்றென்றும் உங்களுக்கான சேவையைத் தொடர்ந்தும் வழங்குவேன். எமது ரெலிபோன் சின்னத்துக்கு வாக்களித்து எனது விருப்பு இலக்கம் 2க்கும் தலைமை வேட்பாளர் வேல்முருகு தங்கராசா அவர்களின் இலக்கம் 11 க்கும் வாக்களித்து வெற்றிபெறச் செய்யுமாறு வேண்டுகிறேன்.


திரு. வேல்முருகு தங்கராசா (அ.இ.ச.நீதிவான்) (ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மத்திய குழு உறுப்பினர், யாழ். மாவட்ட ஸ்ரீலங்கா சு.கட்சி முதன்மை வேட்பாளர்.)


திரு. ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி (அ.இ.ச.நீதிவான்) (யாழ்.இடைக்காடு மகாவித்தியாலய பழைய மாணவன், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பிரதம அமைப்பாளர் கோப்பாய்த் தொகுதி, கொழும்பு தமிழ்ச் சங்கக் கல்விக்குழுச் செயலாளர்)

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 11 | 12 | | | | | | | | |

சந்திரிகாவின் ஏகப் பிரதி நிதிகள் நாமே!

(79209)



## வாழ்த்துகின்றோம்

எமது கல்லூரியின் புகழ் பூத்த பழைய மாணவரும், பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளருமாகிய

திரு. S.T.B. இராஜேஸ்வரன்
(சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I)
அவர்கள்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டம் பெற்றமையை இட்டு மனமார வாழ்த்துகிறோம்.

பழைய மாணவர் சங்கம்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
அதிபர், ஆசிரியர், மாணவர்கள்,
அலுவலக ஊழியர்கள்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

(C/13266)

## புலிகளை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் தெரிவித்ததாவது:-

★ சமாதானப் பேச்சுக்களுக்கான நோர்வே அரசின் முயற்சிக்கு விடுதலைப் புலிகள் ஆதரவு அளிக்கத் தவறியதாலேயே அரசாங்கம் அவர்களுக்கு எதிராகப் போரைத் தீவிரப்படுத்தியுள்ளது.

★ யாழ்ப்பாணக் குடாநாட்டைக் கைப்பற்றும்வரை சமாதானப் பேச்சு எதிலும் பங்குபற்ற முடியாது என்று விடுதலைப் புலிகள் நோர்வேயிடம் தெரிவித்துவிட்டனர். அதனால் அரசாங்கமும் போரைத் தீவிரப்படுத்த நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது.

★ இவ்வருட ஆரம்பத்தில் அரசியல் தீர்வு ஒன்றைக் காணும் முயற்சிக்கு நோர்வேயை ஒரு அனுசரணையாளராக ஏற்றுக்கொள்வதற்கு அரசாங்கத்தினரும், விடுதலைப் புலிகளும் இணங்கினர். எனினும் ஏப்ரல் மாதத்தில் விடுதலைப் புலிகள் வடக்கில் தொடுத்த பெரும் யுத்தம் காரணமாக அந்த முயற்சி தடைப்பட்டது.

★ விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் அரசாங்கம் வெல்லக்கூடிய சாத்தியம் அதிகம் உள்ளது. அதில் எமக்கு நம்பிக்கையும் உள்ளது. எனினும் போரைத் தொடர்ந்து நடத்தாமல் இனப்பிரச்சினைக்குப் பேச்சு மூலமான அரசியல் தீர்வைக் காணவே நான் பெரிதும் விரும்புகின்றேன்.

★ இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றைக் காணும் வகையில் அரசமைப்பில் சீர்திருத்தம் கொண்டுவரும் எனது முயற்சியைக் கைவிடமாட்டேன்.

★ தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளைத் திருப்திப்படுத்தும் வகையில் அவர்களுக்கு சுயாட்சி வழங்கும் தீர்வுத் திட்டம் ஒன்றைத் தேர்தல் முடிந்து எமது கட்சி பதவிக்கு வந்த பின்னர் கொண்டு வருவேன்.

★ தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் பதவிக்கு வருவேன் என்ற நம்பிக்கை உள்ளது. அதன் பின்னர் அரசமைப்புச் சீர்திருத்தத்தை மிகவிரைவில் நாடாளுமன்றத்துக்குக் கொண்டுவருவேன். தேவை ஏற்படின் நாடாளுமன்றத்தை அரசமைப்புச் சபையாகவும் மாற்றுவேன். (இ-3)

## ஈ.பி.டி.பியின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டது.

தேர்தல் பிரசார நடவடிக்கையில் ஈடுபட்ட வானை மகிழூர் கண்ணகை ஆலயத்துக்கு அருகில் இடைமறித்த ஆயுதம் தாங்கிய குழுவொன்று வாகனத்தை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியது எனவும்-

அந்தச்சமயம் வாகனத்தில் இருந்த அக்கட்சியின் வேட்பாளரான பெரியதம்பி வீரசிங்கம் மற்றும் இரு உறுப்பினர்கள் தப்பிச்செல்லவே ஏனையோர் படுகாயமடைந்தனர் எனவும்-

மட்டக்களப்புச்செய்திகள் தெரிவித்தன.

ஜெயசேகரம் சுதா (வயது36), தங்கராஜா கபிலன் (வயது18), தேவராஜன் ரமேஷ்(வயது19) ஆகியோரே படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ-7-8-21)

## நாகர் கோயிலில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாகவும் அதே அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் நேற்றும் படையினரின் மினி முகாம்கள், முன்னணிக் காவலரண்கள், பாதுகாப்பு வேலிகள் மீது தாம் உக்கிரத் தாக்குதல்களை நடத்தியதாக விடுதலைப்புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

வியாழக்கிழமையன்று நடந்த சண்டையில் விமானப்படை விமானங்கள் தாக்குதல் நடத்தி புலிகளின் துப்பாக்கி நிலைகளை அழித்ததாகவும் -

புலிகள் தரப்பில் எவரும் தப்பிச் செல்லாதவாறும் புதிய அணியினர் உட்புகாதவாறும் கடற்படையினர் கடும் தாக்குதலை நடத்தித் தடுத்தனர் என்றும் - விசேட ஊடகத் தகவல் நிலைய அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இச்சண்டையில் அதிகாரி ஒருவரும், 7 படையினரும் மரணமடைந்ததாகவும் 3 அதிகாரிகளும் 29 படையினரும் காயமடைந்ததாகவும் அறிவிக்கப்பட்டது.

இதேவேளை விமானப்படையினர் பூநகரியில் புலிகளின் நெடுந்தூர ஆட்லறி இயந்திரம் ஒன்றைத் தாக்கி அழித்ததாகவும் -

அவர்களின் முக்கிய தலைவர்களில் ஒருவரான முரளியும் மகளிர் படை அணியின் தலைவியும் நாகர் கோயிலில் இறந்ததாகவும் - அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# என்னுடன் சேர்ந்து பணியாற்றக் கூடியவர்களை நாடாளுமன்றத்துக்கு அனுப்பி வையுங்கள்

## யாழ். மக்களுக்கு சந்திரிகா கோரிக்கை

"என்னுடன் சேர்ந்து பணியாற்றக் கூடிய நாடாளுமன்றத்தைத் தேர்ந்தெடுப்பதன் மூலமே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும். எனவே யாழ். மக்கள் இதனைச் சிந்தித்து என்னுடன் சேர்ந்து பணியாற்றக் கூடியவர்களுக்கு ஆதரவு வழங்க வேண்டும்."

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

யாழ்.மக்களுடன் செய்மதி மூலமான தொலைபேசி உரையாடல் நிகழ்ச்சியிலேயே ஜனாதிபதி இப்படிக் குறிப்பிட்டார்.

ஈ.பி.டி.பியின் யாழ்.அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த நிகழ்வின் இரண்டாவது தொடர்பு நேற்று இடம்பெறவிருந்த போதும், செய்மதித் தொடர்பில் ஏற்பட்ட கோளாறு காரணமாக நேற்று அது இடம்பெறவில்லை. இன்று இடம்பெறும் என ஈ.பி.டி.பி. வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜனாதிபதி இந்த நிகழ்வில் மேலும் கூறியதாவது:-

எதிர்வரும் 10ஆம் திகதி இடம்பெறவுள்ள தேர்தலில் வெற்றிபெற்றுப் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஆட்சி அமைப்பது உறுதி என்பதைக் கூறவிரும்புகின்றேன். ஆட்சி அமைத்ததும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக என்னையே அர்ப்பணிக்க விருக்கின்றேன். எனவே என்னுடன் இந்த முயற்சியில் சேர்ந்து பணியாற்றக் கூடியவர்களை யாழ். மக்கள் தெரிவு செய்யவேண்டும் என்றார்

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படவில்லையே" என்று ஒருவர் கேட்ட கேள்விக்குப் பதிலளித்த ஜனாதிபதி, எமது முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இனப்பிரச்சினைக்கும், பொருளாதாரத் திட்டங்களுக்கும் முக்கிய இடம் அளிக்கப்பட்டுள்ளது என்றார்.


## நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் - 2000

### யாழ்.தேர்தல் மாவட்டம்

பிரபல வர்த்தகரும் சமூக சேவையாளரும் கொக்குவில் வாழ் மக்களின் அபிமானத்தைப் பெற்றவருமான எமது நண்பன் **சண்முகம் சிவலிங்கராசா ஐ.தே.கட்சியின்** வேட்பாளராகப் போட்டியிடுவதையிட்டுப் பெருமகிழ்ச்சி அடைகின்றோம். அவரது இலக்கம் **9** க்கும், அவரது கட்சிக்கும் வாக்களித்து அவரை வெற்றியடையச் செய்யுமாறு கோரி நிற்கின்றோம்.

ஐ.தே.கவின் முதன்மை வேட்பாளரும், மகாலட்சுமி ஸ்ரோர்ஸ் உரிமையாளருமான தி.மகேஸ்வரனின் விருப்பு இலக்கம் **4** க்கும் வாக்களிக்குமாறு கேட்டு நிற்கின்றோம்.



சண்முகம்
சிவலிங்கராசா விருப்பு
இலக்கம் 9

**கொக்குவில் இளைஞர்கள்**

(C/13271)

**எரிக்கின்ற தேசத்தில் இடர்படும் மக்களே......**
**இதுவரை உங்கள் அவலவாழ்வு தொடர்வது?......**
**இன்றே தடுத்து நிறுத்திட......**
**வீணைக்கு வாக்களிப்பீர்!**

- ❑ எரியும் எம் இனப்பிரச்சினைக்கு அம்பாறையைத் தாரைவார்த்துக் கொடுத்திடாத வடக்குக் கிழக்கு எக்காலத்திலும் பிரிக்கப்படாத, தன்னாட்சி அதிகாரம் கொண்ட "ஈழ மாநிலத்தை" தீர்வாகப் பெற்றிட.....
- ❑ தொடரும் அநாவசிய யுத்தத்தை நிறுத்தி நிரந்தரச் சமாதானத்துக்கு வழிகாட்டிட....
- ❑ "அப்புக்காத்துகள் நல்லாய் அரசியல் பேசுவர்" எனக் கதை பல பேசிக் கூத்தாடிக் கூத்தாடி எம் இனத்தையே குட்டிச் சுவராக்கிய கையாலாகாத்தனங்களுக்கு முடிவு பெற்றிட....
- ❑ வரி, கப்பம் என மக்களை வருத்துகின்ற நிலைக்கும் மட்டக்களப்பிலும் வவுனியாவிலும் போலி அரசியல் பேசி ஆயுதங்கள் ஏந்தி அப்பாவிகளை அழித்தொழிக்கும் அரக்கத்தனத்துக்கும் விடிவு பெற்றிட....
- ❑ அன்று எம் செல்வங்களை கட்டாய இராணுவத்துக்கு ஆள் சேர்த்து மரணப் படுகுழிக்குள் தள்ளிவிட்டு, - இன்று மீண்டும் எம் நிலத்தை அசுத்தப்படுத்துகின்ற கொடுங்கோலர்களுக்கு மக்களே தீர்ப்பை வழங்கிட....
- ❑ எம் செல்வங்களின் சுபீட்சமான, ஒளிமயமான எதிர்காலத்துக்கு.....
- ❑ நிரந்தர சமாதானமும் நிம்மதி வாழ்வும் கொண்ட எம் இனிய தேசத்தை மீளக் கட்டியெழுப்பிட....



X

**உங்கள் வாக்குகள் வீணைச் சின்னத்திற்கே!**

(978937)


பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.10.2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# உதயன்

## எல்லோரையும் எல்லாக் காலமும்..

சிலரைப் பல காலம் ஏமாற்றலாம்; பலரைச் சிலகாலம் ஏமாற்றலாம்; எல்லோரையும் எல்லாக் காலமும் ஏமாற்ற முடியாது. ஆனால் அரசியல்வாதிகள் சிலர், மக்கள் எல்லோரையும் எந்த நேரமும் ஏமாற்றலாம் என்று இன்னமும் நினைக்கிறார்கள்—தங்கள் தகிடு தத்தங்களில் அதித நம்பிக்கை வைத்து!

மேற்கண்ட வரிகளை வாசித்ததும் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் இம்முறை வேட்பாளர்களாக நிற்கும் அரசியல்வாதிகளையே அவை சுட்டுவதாக நீங்கள் நினைப்பீர்கள். அவர்களுக்கும் இவை பொருந்துமாயினும், அமைச்சர் ஒருவர் தெரிவித்த தகவலைப் படித்தபோதே மக்களை நீண்ட காலத்துக்கு ஏமாற்ற முடியாது என்பதனை அவர் உணரத் தவறியதைக் கருத்தில் கொள்ள நேர்ந்தது.

யாழ்ப்பாணத்தில் ஒக்ரோபர் 15 ஆம் திகதி—மாத நடுப்பகுதியில், மாரிகாலம் —கடும் மழை–தொடங்கிவிடும். அதற்கு முன்னர், விடுதலைப் புலிகளிடம் இழந்த பகுதிகளை மீட்பதற்காக யாழ்ப்பாணக் குடாநாட்டில் பெரும் இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் —என்று அமைச்சர் அனுருத்த ரத்வத்த செய்தியாளர்களிடம் தெரிவித்திருந்தார்.

அமைச்சர் இதனைக் கூறியது இம்மாதம் மூன்றாம் திகதியன்று. அவர் போட்ட கால அட்டவணையான எதிர்வரும் பதினைந்தாம் திகதிக்கு இடையிலேயே தேர்தல் நாளான பத்தாம் திகதியும் வருகிறது! அவர் கூறியதுபோல இராணுவ நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தினால் குடாநாட்டில் தேர்தல் எவ்வாறு நடைபெறும்?

குடாநாட்டில் இராணுவ நடவடிக்கையைத் தீவிரப்படுத்தும் போது, தமிழ் மக்கள் தரப்பில் உயிரிழப்புகளும், அழிவுகளும் உண்டாகும் என்பது அமைச்சருக்குத் தெரியாத விடயமல்ல. அதன் மத்தியில் தேர்தலை அரசாங்கம் நடத்தப்போகிறதா?

அவற்றைப் பற்றி அமைச்சருக்கு என்ன அக்கறை? குடாநாட்டில் இழந்த பகுதிகளை மீட்டுவிட்டோம்; போரை நாம் கைவிடுவதாக இல்லை; என்று கூறி சிங்களமக்களை — வாக்காளரை — அவர்களில் பேரினவாதிகளை — மனங்குளிரச் செய்து தேர்தலில் வென்று ஆட்சிபீடத்தில் ஏறி மீண்டும் அமைச்சராக வருவதே அனுருத்தவின் நோக்கம்!

யாழ்ப்பாணம் எங்கேயோ ஒரு மூலையில் கிடக்கிறது. அங்கு நிலைமை எப்படி உள்ளது—உண்மை நிலை—போர்க்களத்தின் உண்மையான நிலை—தெற்கிலும், மேற்கிலும் உள்ள சிங்கள வாக்காளருக்கு எங்கே தெரியப் போகிறது. அது தெரிந்துவிடக் கூடாது என்பதற்காகத்தானே ஜனநாயகத்தின் அடித்தளமான தேர்தல் வேளையிலும் இராணுவச் செய்திகளுக்கான தணிக்கை தொடருகிறது— என்று அமைச்சர் நினைத்திருக்கக்கூடும்.

ஏற்கனவே அரச படைகள் மேற்கொண்ட "ரிவிபிரண" நடவடிக்கை, தேர்தலை முன்னிட்டு நடத்தப்படவில்லை என்றும் அமைச்சர் கூறியிருக்கிறார்.

ஆனால், குடாநாட்டில் மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கைகள் 'சந்த குண்டு'கள் (தேர்தல் குண்டுகள்) என்று தெற்கில் பரவலாகப் பேசப்படுகிறது. சிங்கள வாக்காளர்களையும் இலகுவில் ஏமாற்றி விட முடியாது என்பதனையே அது காட்டுகிறது;

# நகரில் நேற்று மறியல் போர்!

யாழ்ப்பாணம், ஒக். 7

அமைய சுகாதார சுத்திகரிப்புத் தொழிலாளர்களாக புதியவர்களை நியமனம் செய்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, யாழ். சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளர் அலுவலகத்தின் முன்பாக நேற்றுக்காலை மறியல் போராட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

சுகாதார சேவைகள் திணைக்களத்தின் கீழ் உள்ள யாழ். மாவட்ட ஆஸ்பத்திரிகளில் கடந்த பல வருடங்களாகக் கடமையாற்றிவரும் அமைய சுகாதாரச் சுத்திகரிப்புத் தொழிலாளர்களே இந்த மறியல் போராட்டத்தை நடத்தினர்.

நீண்ட காலமாகக் கடமையாற்றிவரும் தமக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை. அத்துடன் அமைய சுகாதார சுத்திகரிப்புத் தொழிலாளர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்காக இதுவரை நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சைகளுக்குத் தமக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை எனத் தெரிவித்தே இவர்கள் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதேவேளை மேற்படி மறியல் போராட்டம் காரணமாக சுகாதார பிரதி மாகாணப்பணிப்பாளர் மற்றும் நிர்வாக அதிகாரிகள், ஏனைய உத்தியோகத்தர்கள், தொண்டர் தொழிலாளர்கள் அலுவலகத்தினுள் செல்ல அனுமதிக்கப்படவில்லை.

இதற்கிடையில் வடக்கு – கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளருடன் பிரதி மாகாணப் பணிப்பாளர் செல்வி உமா சிவபாதசுந்தரம் மேற்படி விடயம் குறித்து தொடர்பு கொண்டதை அடுத்து இந்த நேர்முகப்பரீட்சை நடைபெறாது என உரியவர்களுக்கு அறிவிக்குமாறு தெரிவிக்கப்பட்டதாக பாதிக்கப்பட்ட சுகாதாரத் தொண்டர்கள் விடுத்த பத்திரிகைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7-10-15-ரி)

# உதயன்

## பல்கலைக்கழக பட்டமளிப்புவிழா சிறப்பாக இடம்பெற்றது

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 19 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா நேற்றுப் பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது.

மூன்று அமர்வுகளாக நடைபெற்ற இந்தப் பட்டமளிப்பு விழாவில் முதலாவது அமர்வு காலை 9.30 மணிக்கும் இரண்டாவது அமர்வு முற்பகல் 11.30 மணிக்கும் மூன்றாவது அமர்வு பிற்பகல் 2.30 மணிக்கும் ஆரம்பமாகித் தொடர்ந்து பட்டமளிப்புநிகழ்வுநடைபெற்றது.

இந்த மூன்று அமர்வுகளிலும் மொத்தமாக 840 பேருக்கு பட்டங்கள் வழங்கப்பட்டன.

## தேர்தல் கடமையாற்ற 4,223 பேருக்குக் கடிதம்

தேர்தல் வாக்களிப்பு நிலையங்களில் கடமையாற்றுவதற்கு 4 ஆயிரத்து 223 அரச உத்தியோகத்தர்களுக்கு நியமனக் கடிதங்கள் யாழ். செயலகத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

423 சிரேஷ்ட தலைமை அலுவலர்களும், 693 கனிஷ்ட தலைமை அலுவலர்களும், , 2 ஆயிரத்து 684 எழுதுவினைஞர்களும், 423 சிற்றூழியர்களும் வாக்களிப்பு நிலையங்களில் கடமையாற்றவுள்ளனர்.

இவர்களுக்கு தேர்தல் தொடர்பான அறிவுறுத்தல் கூட்டங்கள் அண்மையில் நடத்தப்பட்டன.

இதேவேளை வாக்குகள் எண்ணும் பணி, போக்குவரத்து பிரிவு உதவித் தேர்தல் அந்தாட்சி அலுவலர் உட்பட மேலும் பலர் தேர்தல் கடமைகளில் ஈடுபடவுள்ளனர் (இ-5)

# ஜனநாயக நடைமுறைகளின் கீழேயே நீதியான தேர்தல் சாத்தியம் ஆகும்

## அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் அறிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 7

யாழ்ப்பாணத்தில் ஜனநாயக நடைமுறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றனவா அல்லது இல்லையா என்பதை வெளிப்படுத்த வேண்டும். ஜனநாயகம் இங்கு கடைப்பிடிக்கப்படுவதில்லையானால் எதிர்வரும் 10 ஆம் திகதி நடைபெறும் தேர்தலைச் செல்லுபடியற்றதாகப் பிரகடனம் செய்யவேண்டும்.

யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தினால் வெளியிடப்பட்ட செப்ரெம்பர் மாத நிலவர அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மக்கள் எதிர்நோக்கும் பல பிரச்சினைகள் தொடர்பாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ள இந்த அறிக்கையில் ஜனநாயகமும் பொதுத் தேர்தலும்' என்ற தலைப்பிலான பகுதியில் மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

ஜனநாயகத்தைக் கட்டிக் காப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் ஜனநாயகத்தின் அடிப்படைக் கோட்பாடுகளைச் சிதைப்பனவாக உள்ளன.

ஆகவே யாழ்ப்பாணத்தில் ஜனநாயகம் உண்டா? அல்லது இல்லையா? என்பதை அரசியல் விஞ்ஞானிகள் விரிவாக ஆய்வு செய்து உண்மை நிலையை வெளிப்படுத்த முன்வர வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் ஜனநாயகம் பேணப்படவில்லையானால் தேர்தலானது செல்லுபடியற்றதாகப் பிரகடனப் படுத்தப்படல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட நடவடிக்கை எடுக்கப்படாதுவிடில் ஜனநாயகத்துக்கு சாவுமணி அடிப்பது மட்டுமல்லாமல் ஜனநாயகமுறையே கேலிக்கூத்தாகிவிடும்.

தேர்தல் இடம்பெறும் பகுதி ஜனநாயக ஆளுகைக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும். ஆளுகை மக்களுக்காக மக்களால் இடம்பெற வேண்டும்.

தேர்தலானது நாட்டாண்மைக்கு உட்படுத்தப்படாமல் சுதந்திரமாகவும் நேர்மையாகவும் நடத்தப்படவேண்டும். மக்கள் ஆர்வமாகப் பங்கேற்க வசதி செய்யப்படல் வேண்டும்.

இப்படி அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாதமும் வெளியிடப்படும் இந்த நிலவர அறிக்கை கொழும்பிலுள்ள மனிதநேய தொண்டு நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (இ-5)

## அஞ்சலிக் கூட்டம்

வட்டுக்கோட்டைத் தொகுதித் தமிழ்ச் சங்கத்தினர் இலக்கண வித்தகர் இ. நமசிவாய தேசிகருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் நாளை ஞாயிற்றுக்கிழமை கூட்டம் ஒன்றை நடத்தவுள்ளனர்.

சித்தன்கேணியில் உள்ள சங்கப் பணிமனையில் நாளை காலை 830மணிக்கு ஆரம்பமாகும் இந்தக் கூட்டத்தில் பல அறிஞர்கள் உரையாற்றவுள்ளனர். அந்த நிகழ்வைத் தொடர்ந்து சங்க வளர்ச்சி பற்றிய கலந்துரையாடலும் நடைபெறுமென்று அதன் செயலாளர் பண்டிதர் ம. ந. கடம்பேஸ்வரன் தெரிவித்தார். (அ)

## மிதிவெடி

விறகு வெட்டச்சென்ற ஒருவர் மிதிவெடியில் சிக்குண்டு முகம், கைகளில் பலத்த காயமடைந்தார்.

உரும்பிராய் மேற்கில் நேற்றுக்காலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அந்தோனி அரியநாயகம் (வயது 46) என்பவரே காயமடைந்தவராவார்.

சிறிய மரம் ஒன்றை வெட்டிக் கொண்டிருந்த சமயமே வெட்டிய கத்தி மரத்தின் அடியில் இருந்த மிதிவெடியில் பட்டதால் மிதிவெடி வெடித்துச் சிதறியதாகத் தெரிவிக்கப்பட்டது.

## இடம்பெயர்ந்த மக்களுக்கு மானிப்பாயில் வாக்காளர் அட்டை

யாழ்ப்பாணம், ஒக். 7

இடம்பெயர்ந்து வலிகாமம் பகுதியில் வசிக்கும் வாக்காளர்களின் நன்மை கருதி அவர்களுக்குரிய வாக்காளர் அட்டைகள் மானிப்பாய் அஞ்சல் அலுவலகத்தில் வைத்து நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியிலிருந்து பி. ப. 3.30 மணி வரை விநியோகிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

குருநகர், பாசையூர், கொழும்புத்துறை, அரியாலை பளை, சாவகச்சேரி, கைதடி ஆகிய அஞ்சல் அலுவலகப் பிரிவுகளையும் தாளையடி, முள்ளியான், இயக்கச்சி, எழுதுமட்டுவாழ், மீசாலை ஆகிய உபஅஞ்சல் அலுவலகப் பிரிவுகளையும் சேர்ந்தவர்களுக்கான வாக்காளர் அட்டைகளே மானிப்பாயில் வைத்து விநியோகம் செய்யப்படவுள்ளன. (ரி-5)

## தென்மராட்சி கிழக்கு வாக்களிப்பு நிலையங்கள் நெல்லியடிக்கு மாற்றம்

யாழ்ப்பாணம், ஒக். 7

தென்மராட்சி கிழக்குப் பகுதியில் அமைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த 14 வாக்களிப்பு நிலையங்கள் நெல்லியடிக்கு இடம்மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

இப்பகுதியில் ஏற்பட்ட பதற்ற நிலையைத் தொடர்ந்து இங்குள்ள மக்கள் பலரும் இடம்பெயர்ந்துள்ளதாலேயே வாக்களிப்பு நிலையங்களை இடமாற்றம் செய்யவேண்டிய நிலை ஏற்பட்டதாக யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

கொடிகாமம், 'வரணிப் பகுதிகளில் அமைக்கப்படவிருந்த இந்த வாக்களிப்பு நிலையங்கள் நெல்லியடி ம. ம. வித்தியாலயத்துக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

## யாழ். பல்கலைக்கழகத்தில் நடக்கும் நினைவுப் பேருரைகள்

யாழ்ப்பாணம், ஒக். 7

யாழ். பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவை ஒட்டி வருடாந்தம் இடம்பெறும் சிமாட்டி லீலாவதி இராமநாதன், சேர் பொன். இராமநாதன், பேராசிரியர் சு. வித்தியானந்தன் ஆகியோரின் நினைவுப் பேருரைகள் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் அடுத்த வாரம் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 13 ஆம் திகதி மாலை 3 மணிக்கு சிமாட்டி லீலாவதி இராமநாதன் நினைவுப் பேருரை நடைபெறவுள்ளது. அன்றைய தினம் 'சைவசித்தாந்தம் காட்டும் வாழ்க்கை நெறி என்னும் தலைப்பில் துர்க்கா துரந்தரி கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி நினைவுப் பேருரையை நிகழ்த்துவார்.

14 ஆம் திகதி மாலை 3 மணிக்கு நடைபெறவுள்ள சேர் பொன்னம்பலம் இராமநாதன் நினைவுப் பேருரையை 'மனித மேம்பாட்டிற்கான கல்வி' என்னும் தலைப்பில் பேராசிரியர் சி. சிவஞானசுந்தரம் நிகழ்த்துவார்.

16 ஆம் திகதி மாலை 3 மணிக்கு நடைபெறவுள்ள பேராசிரியர் சு. வித்தியானந்தன் நினைவுப் பேருரையை 'பண்டைய இலங்கையில் தமிழரும் உள் ஒழுங்கமைப்பும்' என்ற தலைப்பில் பேராசிரியர் எஸ். கே. சிற்றம்பலம் நிகழ்த்துவார். (ஐ-5)

## பொன் விழா

அன்னை திரேசா சபையினரின் பொன்விழாக் கொண்டாட்டத்தை ஒட்டி புனித மரியன்னை பேராலயத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.15 மணிக்கு நன்றித் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படவுள்ளன.

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ். பல்கலைக்கழக 19 ஆவது பட்டமளிப்பு விழாவில் மாகியம்பதியில் பட்டம் பெற்ற

**திரு. ஜேக்கப் சாள்ஸ் நிமலன் B.A(Hons)**

அவர்களை வாழ்த்துகின்றோம்.

அருள் குடும்பத்தினர்,
மாகியம்பதி.

(79259)

# வணங்குகின்றோம்

''எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்''

தரம் 5 புலமைப் பரிசில்
பரீட்சையில் தகுதிகாண்
நிலையெய்துவதற்கும் — சித்தி
அடைவதற்கும் அயராது
உழைத்து,
எமைக் கற்க ஊக்குவித்த
எம் பாடசாலை ஆசிரியத்
தெய்வங்களை
வணங்குகின்றோம்.

— தரம் 5 மாணவர்கள்.

சென். யோன் பொஸ்கோ வித்தியாலயம்,
யாழ்ப்பாணம்.

(79197)

# ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் தம்பையா தாமோதரம்பிள்ளை

(இராசசம் அரிசி ஆலை)

தோற்றம்: 17-10-1922 — மறைவு: 07-10-1995

ஆண்டுகள் ஐந்து ஓடி மறைந்தாலும் என்றும் உங்கள் நினைவுகள் எம் இதயத்தை விட்டகலாது.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

தற்காலிக முகவரி:
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

நிரந்தர முகவரி;
சரசாலை வடக்கு,
சாவகச்சேரி.

(79251)

# நாளை நடப்பவை

யாழ்ப்பாணம், ஒக். 7

மானிப்பாய் வட்டம், இணுவில், சுன்னாகம் லயன்ஸ் கழகங்கள் தென்னிந்திய திருச்சபை யாழ். ஆதினத்துடன் இணைந்து நடத்தும் இலவச மருத்துவ சேவை நாளை ஞாயிற்றுக்கிழமை இணுவில் மக்லியட் வைத்திய சாலையில் நடைபெறவுள்ளது.

யாழ். போதனா வைத்திய சாலையின் வைத்திய நிபுணர்களைக் கொண்டு வசதி குறைந்த மக்களுக்காக நடத்தப்படும் இந்த வைத்திய சேவையில் பலதரப்பட்ட நோய்களுக்குமான சிகிச்சைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

மானிப்பாய் வட்டப் பிரிவைச் சேர்ந்த வசதிகுறைந்த மக்கள் இந்தச் சேவையைப் பயன்படுத்துமாறு கேட்கப் பட்டுள்ளது.

(ஐ -3 - 15)

★ ★ ★

உலக சேவை தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் மானிப்பாய் மகேஸ்வர இல்லச் சிறுவர்களுக்கு விருந்து வழங்கும் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வின் போது சிறார்களுக்கு இரு வாரங்களுக்குத் தேவையான உணவுப் பொருள்கள் கையளிக்கப்படுவதுடன் அன்று அன்னதானமும் வழங்கப்படும்.

லயன் டாக்டர் எஸ். எஸ். அருளானந்தம் கண், பல். பாதுகாப்பு 'என்னும் தலைப்பில் உரையாற்றுவார்.

(ஐ-3)

★ ★ ★

பருத்தித்துறை, ஒக்.7

வடமராட்சி வலயப் பாடசாலைகளில் தரம் 7, 10 வகுப்புக்களில் இந்துசமயம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கும் செயலமர்வும் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் அமைந்துள்ள ஆசிரியர்பயிற்சி நிலையத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 8. 30 மணிக்கு நடைபெறவுள்ளது. இத்தரங்களில் கற்பிக்கும் ஆசிரியர்கள் தவறாது கலந்து கொள்ள வேண்டுமென வடமராட்சி வலயக் கல்விக் பணிப்பாளர் சி. சிவராசா அறிவித்துள்ளார்.

(இ-118)

★ ★ ★

யாழ். பல்கலைக்கழகப் புறநிலைப்படிப்புகள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கும் திரைப்படக் காட்சித் தொடரில் பிரெஞ்சுத் திரைப்படம் ஒன்று (La Femme Nlkifa) வீடியோக் காட்சியாக நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் காண்பிக்கப் படவுள்ளது.

(ஐ-3)

''ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம''

# நிகரை ஞான வயிரவர் ஆலயம்

சங்கானை.

## சாமுண்டீஸ்வரி எழுந்தருளி விக்கிரகம் வார்க்கும் வைபவம்

### 2000-10-08 ஞாயிற்றுக்கிழமை

புரட்டாதித் திங்கள் 22ஆம் நாள்(2000-10-08) ஞாயிற்றுக்கிழமை திருவோண நட்சத்திரமும் அமிர்த யோகமும் கூடிய காலை 9.02 முதல் 10.32 மணி வரையுள்ள சுபவேளையில் எம்பிராட்டியின் உருவச் சிலை வார்க்க இறையருள் கை கூடியுள்ளது.

இந்த வைபவம் அன்றைய தினம் அதிகாலை 5.00 மணி முதல் ஆரம்பமாகின்றது. இந்த உருவச் சிலை வார்ப்பிற்கு தாம்பர உலோகம் உருக்கப்படும் வேளையில் தங்கம், பவுண். வெள்ளி எனப்படும் உலோகங்களும் சேர்க்கப்படவுள்ளன.

மெய்யடியார்கள் தங்கள் காணிக்கையாக அந்த இடத்தில் உரிய நேரத்தில் குறிப்பிட்ட உலோகங்களை வழங்கவிரும்பின், எம் பிராட்டியின் உருவச் சிலைக்கு உருக்கும் உலோகத்துடன் அவற்றையும் சேர்த்து வார்ப்பதற்கு ஆவன செய்யப்பட்டுள்ளதுடன், அங்கு கூடியிருக்கும் அடியார்கள் அந்தச் சமயத்தில் தங்கள் விருப்பத்தை நிறைவு செய்ய குறிப்பிட்ட உலோகம் இல்லாதவர்கள் சிறு தொகையை வழங்கி, விரும்பும் உலோகத்தைப் பெற்றுக் குண்டத்தில் இட்டுத் தமது விருப்பத்தை நிறைவு செய்யவும் ஆலய பரிபாலன சபையினரால் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

குறிப்பு; இன்று (07-10-2000) சனிக்கிழமை மாலை 3.02 மணி முதல் 4.32 மணி வரையுள்ள சுபவேளையில் புதிதாக அமைக்கப்பெற்ற மஞ்சத் தரிப்பிடத்தில் சித்திரத் திருமஞ்சத்தைச் சேர்க்கும் வைபவமும் இடம் பெறும் என்பதையும் அடியார்களுக்கு அறியத் தருகின்றோம்.

(சி/13257) - ஆலய பரிபாலன சபையினர்

# மரண அறிவித்தல்கள்

## முத்துக்குமாரு யோகநாதன்

முத்துக்குமாரு யோகநாதன் கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துக்குமாரு [இளைப்பாறிய பொலீஸ் உத்தியோகத்தர்] மற்றும் வள்ளியம்மை ஆகியோரின் அன்பு மகனும் சிவலோகநாதன் [சாம் சிவா மல்ரி றேட் சென்ரர், கல்வியங்காடு], ரஜனி [லண்டன்] ஆகியோரின் அன்புச் சகோதரனும் வாமதேவன் [லண்டன்], ஜமுனாராணி ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற முருகேசு [ஆசிரியர்] மற்றும் திருமதி முருகேசு [அமெரிக்கா], திரு. திருமதி செல்லையா [சட்டத்தரணி, கரவெட்டி] ஆகியோரின் பெறாமகனும் நிஷாந்தன், வாணி [லண்டன்] ஆகியோரின் அச்சா மாமாவும் ஜனகன் முத்துக்குமார், நிறூஜ் முத்துக்குமார், அனோஜ் முத்துக்குமார் [யாழ். பரியோவான் கல்லூரி மாணவர்கள்] ஆகியோரின் அன்புச் சித்தப்பாவுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல 21, Vavaset Place வெள்ளவத்தையில் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;

முத்துக்குமாரு சிவலோகநாதன்
[அண்ணன்]

செல்லையா ஜெயக்குமார்
[தம்பி]

சட்டநாதர் வீதி,
நல்லூர்.

[சி/13260]

## திருமதி இராசரத்தினம் இராசேஸ்வரி

திருநெல்வேலியைப்பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி இராசரத்தினம் இராசேஸ்வரி நேற்று (06 - 10 – 2000) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம், திருமதி வல்லிபுரம் சின்னப்பிள்ளை ஆகியோரின் பாசமிகு மகளும், துரைச்சாமி இராசரத்தினத்தின் அன்பு மனைவியும், சரவணபவானந்தன், (தொழில் திணைக் களம்), சண்முகானந்தன் (ஜேர்மனி), முருகானந்தன் (யாழ்ப்பாணம்-இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கௌரிமலர், தவமலர், (ஜேர்மனி), ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கௌசல்யன், கவினஜா, சுகன்ஜா, விதுஜன் (ஜேர்மனி) ஆகியோரின் பேர்த்தியும், காலஞ்சென்ற நடேசலிங்கம், விநாயகமூர்த்தி, நாகபூசணி, ஆனந்தம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், பரமேஸ்வரி, பாக்கியலட்சுமி (இருபாலை), சொர்ணலிங்கம் (வவுனியா), ஜெகதீஸ்வரி (இருபாலை) ஆகியோரின் அன்பு மைத்துனியும், சசிகரன், வேணுகரன், வினோதினி, அஜிகரன், அஜிந்தன், அபினஜா, அனோஜன் ஆகியோரின் பாசமிகு அத்தையும், சதுர்ஷன், சகானா ஆகியோரின் பாசமிகு பெரியம்மாவுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (7 - 10 - 2000) சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-

இ. சரவணபவானந்தன்
(மகன்)

இ. முருகானந்தன்
(மகன்)

214/3, இராமநாதன் வீதி,
திருநெல்வேலி.

(79199)

# நகராட்சிமன்றம், வல்வெட்டித்துறை.

## கேள்வி அறிவித்தல்

கீழ்க் குறிப்பிடப்படும் வேலைகளுக்கான கேள்விகள் 18—10—2000 ஆம் திகதி முற்பகல் 10. 00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

ஒப்பந்தத்தை மேற்கொள்ள விரும்புபவர்கள் உரிய கேள்விவைப்புப் பணத்தையும், கேள்வி படிவக் கட்டணத்தையும் செலுத்தி கேள்விப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

| வேலை விவரம் | கேள்விப்படிவக கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் |
|---|---|---|
| 1. வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையில் சாப்பாட்டறை அமைத்தல். | 300/- | 1000/- |
| 2. மானாங்கானை வீதி 2 ஆம் தடவை தாரிடல் | 150/- | 250/- |

கேள்விப் பத்திரங்கள் 2000 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 17 ஆம்திகதி நண்பகல் 12. 00 மணி வரை வழங்கப்படும்.

மேலதிக விவரங்களை எமது அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

தலைவர்,
நகராட்சிமன்றம், வல்வெட்டித்துறை.

நகராட்சிமன்ற அலுவலகம்,
வல்வெட்டித்துறை. 28-09-2000.

(சி/13262)

# அவசரகாலச் சட்டத்தை ஆதரித்து தமிழ் மக்களை விலைபேசி விட்டன!

## தேர்தல் கூட்டத்தில் ஐ. தே. க வேட்பாளர் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், செப். 7

அவசரகாலச் சட்டத்தால் தமிழ் மக்களுக்கு எந்தப் பயனும் கிடையாது. தமிழ் மக்களை அழிப்பதற்காகக் கொண்டுவரப்பட்ட இந்தச் சட்டத்துக்கு ஆதரவு வழங்கிக்கொண்டிருக்கும் சில தமிழ் அரசியல் கட்சிகள் கடந்த ஆறு வருடங்களாகத் தமிழர்களைச் சிங்கள அரசுக்கு விற்று விட்டன. அடுத்த ஆறு வருடங்களுக்கும் எம்மை எல்லாம் விற்பதற்காகவே மீண்டும் யாழ். மாவட்டத்தில் இக் கட்சிகள் போட்டியிட வந்துள்ளன.

ஐக்கியதேசியக் கட்சி சார்பில் யாழ். மாவட்டத்தில் போட்டியிடும் முதன்மை வேட்பாளர் தியாகராஜா மகேஸ்வரன் இவ்வாறு தெரிவித்தார்.

நல்லூர் ஆலய வீதியில் கடந்த சனியன்று இடம்பெற்ற ஐ. தே. கட்சியின் தேர்தல் பிரசாரப் பொதுக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:

நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் எமக்குக் கிடைத்ததும் அரசின் கைக்கூலிகளாகச் செயற்படும் தமிழ்க் கட்சிகளின் அடாவடித்தனங்களை நிறுத்துவோம். இங்குள்ள வறுமை நிலையில் உள்ள மக்களுக்குக் கசிப்புப் போத்தல்களைக் கொடுத்து, உடு புடைவைகளை வழங்கி அவர்களின் வாக்குகளைப் பெற்றுக்கொண்டு கொழும்பு சென்று சுகபோகம் அனுபவிக்கவே பெரும்பாலான கட்சிகள் இங்கு தேர்தலில் போட்டியிடுகின்றன.

எமது நோக்கம் அவ்வாறானதல்ல; நான் இங்கேயே உங்கள் கண்முன் வாழ்பவன். அரசியலுக்கு வந்துதான் எனது வர்த்தகத்தைப் பெருக்க வேண்டும் என்ற தேவை எனக்குக் கிடையாது. நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் கிடைத்தாலும் இங்கே இருந்து தமிழ் மக்களின் உரிமைக்காகப் போராடுவேன்.

தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டுமாயின் தமிழர்களின் பிரதிநிதிகளானவிடுதலைப்புலிகளுடன் அரசு பேச்சு நடத்த வேண்டும். சந்திரிகா அரசாங்கத்தினால் அது சாத்தியமில்லை.

தமிழர் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமானால் ஆட்சி மாற்றம் இடம்பெற வேண்டும். அரசியலில் பலம் மிக்க கட்சிகளாக விளங்குபவை ஐ தே.கவும்சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் தான். அவற்றினால் எமது பிரச்சினைகளைத் தீர்க்க முடியும். அதனால்தான் சந்திரிகாவுக்கு எதிரான பலம்மிக்க கட்சியான ஐ. தேகவின் கீழ் நாம் எமது மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகத் தேர்தலில் போட்டி இடுகின்றோம்.

ஐ. தே. க. ஆட்சிக்கு வந்ததும் முதலில் விடுதலைப்புலிகளுடன் பேச்சு வார்த்தை மேற்கொள்ளப்படும். தமிழ் மக்கள் தலை நிமிர்ந்து வாழக்கூடிய வகையில் பேச்சுக்கள்மூலம்தீர்வுகாணப்படும்

ஐ. தே. க. ஆட்சிக்காலத்திலும் கூட எமது கொள்கைகளுக்கு இசைந்து செயற்பட அவர்கள் மறுக்கும் பட்சத்தில் நாமும் அவர்களுக்கு எதிரானவர்கள் தான். அத்தகைய ஒரு நிலை ஏற்படும் பட்சத்தில் நாம் எமது பதவிகளைத் தூக்கி எறியவும் தயங்க மாட்டோம்.

### புலிகளின் தியாகங்களை மதிக்கின்றோம்

தமிழ் மக்களின் உரிமைக்காகப் போராடிக்கொண்டிருக்கும் விடுதலைப் புலிகளும்எமது காலத்தில் பிறந்தவாகள்தான். ஆயுதம் ஏந்தி அவர்கள் போராடுகிறார்கள். அவர்களின் போராட்டத்துக்கு நாங்கள் இடையூறு விளைவிப்பவர்கள் அல்லர். அவர்களின் தியாகங்களை மதிப்பவர்கள்.

புலிகளால் தடைசெய்யப்பட்டவர்கள் மீண்டும் ஒருவாறு அரசியல் கட்சிகளாகத் தம்மைப் பதிவுசெய்துகொண்டு, ஆயுதங்களுடன் சம்பளமும் பெற்றுகொண்டு கொலைகளும் புரிந்துகொண்டு இருக்கின்றார்கள். வடமராட்சியில் இளைஞன் ஒருவனின்தலைவெட்டப்பட்டு யாழ் நகரில் கொண்டுவந்து வைக்கப்பட்டது. இத்தகையவர்களும் எம் இனத்தில் பிறந்தவர்கள் தான். சிங்கள மக்களுக்கு நாம் பயப்பட வேண்டியதில்லை. அரசியல் வாதிகள் எனக் கூறிக்கொள்ளும் தமிழ்ப் பேய்களுக்குத்தான் பயப்பட வேண்டி உள்ளது.

துரோகிகளின் காலத்தில் நாம் இங்கு பிறந்து விட்டோம் என்கின்ற கவலை எனக்கு உண்டு. சில சலுகைகள், வேலைவாய்ப்பு கொடுத்து, பண நோட்டுகளை அள்ளிக்கொடுத்து இவர்களை இங்கு அனுப்பி வைத்துள்ளது சந்திரிகா அரசு

### அவலங்கள் ஏராளம்

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக் காலத்திலும் யாழ். பிரதேசங்களில் போர் நடைபெற்றது. ஆனால், தற்போது ஆட்சியில் இருக்கும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் ஆறு வருட ஆட்சியில் நடந்த அவலங்கள் அப்போது இருக்கவில்லை. எத்தனை இடப்பெயர்வுகள்? யாழ்ப்பாணத்திலிருந்து தென்மராட்சிக்கு பின் தென்மராட்சியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு மீள் குடிஅமர்வு —கிளிநொச்சியில் இருந்து மாங்குளம் நோக்கிய இடம்பெயர்வு — இன்று மீண்டும் தென்மராட்சி மக்கள் யாழ். நோக்கிய இடப்பெயர்வு.

'பல்குழல்' ஏவுகணை மற்றும் 'மிக்' விமானக் குண்டு வீச்சால் தென்மராட்சி நகரம் இன்று சுடுகாடாக மாறி உள்ளது உடைமைகளை இழந்து, உடன் பிறப்புகளை இழந்து, உடல், உள காயங்களோடு தங்க இடமின்றி பாடசாலைகளிலும், கோயில்களிலும், உடைந்த வீடுகளிலும் மக்கள் தம் காலத்தைக் கழிக்கின்றனர்.

அமைதி என்ற பெயரில் இந்த அரசாங்கம் எமக்குக் கொடுத்த பரிசு இதுதான். யாழ். மக்களில் கணிசமான பங்கினர் இன்று வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்றனர். ஐ.தே.க. ஆட்சிக்காலத்தில் மீனவர்கள் நல்ல நிலையிலேயே வாழ்ந்தனர். இன்று அவர்களும் நிவாரணத்துக்குக் கையேந்தும் நிலைக்கு வந்துள்ளனர்.

ஐ. தே. க. ஆட்சியின் போது தான் யாழ். பொது நூலகம்,சந்நிதியான் ஆலயத் தேர் என்பன எரிக்கப்பட்டன. ஐ. தே. க ஆட்சிக்கு வரும் பட்சத்தில், அவர்களின் ஆட்சியில் அவை நிச்சயமாக மீள நிர்மாணிக்கப்படும்.

### போக்குவரத்து நிலைமை

குடாநாட்டுக்கு வெளியேயான தமிழ் மக்களின் போக்குவரத்து மார்க்கங்கள் தடைப்பட்ட காலத்தில், அவர்களின் போக்குவரத்துப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு யாரும் முன்வரவில்லை. அந்த நிலையில் நான் முன்வந்து விமான போக்குவரத்துச் சேவையைஆரம்பித்தேன் அதிலும் பல நிபந்தனைகளுடன் சேவையாற்றவேண்டிய நிலை. பொது மக்களுக்குச் சேவையாற்றும் போது அவசர தேவை ஏற்படும் பட்சத்தில் படையினரையும் ஏற்றிச் செல்ல வேண்டும் என்ற நிபந்தனை.

இந்த நிலையில் புலிகளிடம் இருந்து எனக்குக் கடிதம் வந்தது. விமான சேவையில் படையினரும் தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதால் அதனை உடனடியாக நிறுத்துமாறு

கடிதம் உரியவர்களிடம் இருந்து தான்வந்ததுஎன்பதை உறுதிசெய்ததும் உடனடியாக விமான சேவையை நிறுத்திவிட்டேன். தமிழரின் உரிமைக்கும் தியாகத்துக்கும் மதிப்பளிப்பவன் நான் இதனால் பொது மக்களுக்கு ஆபத்து வரக்கூடாது என்று கருதினேன். எனினும் சிங்கள இனத்தைச் சேர்ந்த ஒருவர் இத்தச் சேவையைத் தொடர்ந்தார். அதனால் நாம்எமது மக்களில்55பேரை இழக்கும் நிலை ஏற்பட்டது.

அதைத் தொடர்ந்து தடைப்பட்ட போக்குவரத்தைத் தொடர்வதற்காக சிங்கள இனத்தவரின் துணையுடன் கப்பல் போக்குவரத்தை மேற்கொள்ள வசதியாக கப்பல் ஒன்றை வெளிநாட்டில் இருந்து பெற்றுவந்தோம். அதில் எனது பங்களிப்பும் இருப்பதை அறிந்த தமிழ்க் கட்சி ஒன்று அதை நிறுத்துவதற்குப் படாத பாடுபட்டது. ஏறக்குறைய 5 மாதங்கள் அந்தக் கப்பல் துறைமுகத்தில் தரித்து நின்றது. எனினும் நான் பல வழிகளாலும முயன்றேன் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் வழித்துணைக்கும் கோரினோம். உரிய தரப்பினரின் இணக்கம் கிடைத்ததைத் தொடர்ந்து இன்று ''சிற்றி ஒவ் றிங்கோ'' பொதுமக்கள் சேவையை மேற்கொண்டு வருகின்றது

ஆகவே, எதிர்வரும் 10 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் ஐ.தே.க அபேட்சகர்களை நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்து பலமான ஆளும் கட்சியாக ஐ. தே. கவை ஆக்குவது இன்று அவசியமானதாகும்.

தொடரும் போர் அவலங்களுக்கு முடிவு தேவை. அன்பான தமிழ் மக்களே! சிந்தியுங்கள்—உங்கள் பிள்ளைகள் பாதுகாப்பு இன்றி பயந்து பயந்து ஒடித்திரியும் வாழ்க்கையில் இருந்து விடுபடுங்கள். திருமணம் என்று வெளிநாடு செல்லும் உங்கள் பெண் பிள்ளைகள் படும் அவலங்கள், தப்பி ஓடும் வாழ்க்கை— வேண்டாம்.

எங்கள் சொந்த மண்ணில் அமைதியாக ஒன்றாக வாழ்வோம். ஒரு விடிவை நோக்கிய பயணம் ஆரம்பமாகி விட்டது. மக்களே! நாங்கள் உங்களை ஏமாற்றப் போவதில்லை. எமது திடமான நம்பிக்கையுடன் உங்கள் முன் நிற்கிறோம். யானைச் சின்னத்துக்கு எதிரே புள்ளடி இட்டு அமோக ஆதரவு தருவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு — என்று தெரிவித்தார். (ஐ-9)


## நன்றி நவில்கின்றோம்

24—09—2000 அன்று எமது குடும்பத் தலைவர்

**நாகலிங்கம் துரைராஜா**

அவர்களது மரணச் செய்தியைக் கேள்வியுற்று எங்களுக்கு உதவி செய்தவர்களுக்கும், அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் உற்றார். உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

திருமதி கெ. துரைராஜா
(மனைவி)

நெட்டிலிப்பாய்,
கோண்டாவில்.
(79183)


## மின் இணைப்பு கிடைக்கவில்லை

நெல்லியடி, ஒக். 7

புலோலி வட கிழக்கு ஊரியவத்தைப் பகுதிக்கு மின்சார விநியோகம் வழங்கவென மின் கம்பங்கள் நடப்பட்டு ஒரு வருட காலமாகியும் இதுவரை மின்சார வயர்கள் இணைக்கப்படவில்லை.

இதனால் இப்பகுதியில் சுமார் 20க்கும் மேற்பட்ட மின்பாவனையாளர்கள்பாதிக்கப்பட்டுள்ளனர்.

(ஐ-109)


## மணீஸ் வெளியீடு

2001 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் தரம் 5 மாணவர்களுக்கான முன்மாதிரிப் பரீட்சை வினாத்தாள்கள் விஜயதசமி தினத்தன்று (07—10—2000) வெளிவரும்.

தொடர்பு:

**சதா பொன்ஸ்**

அல்வாய்.

(சி/13249)



## நியூ வீணா கானம்

60, வைமன் வீதி, நல்லூர்.

★ வீணை ★ வயலின் ★ புல்லாங்குழல்
★ வாய்ப்பாட்டு ★ ஓர்கன் ★ கிற்றார்
★ றெக்கோடர் ★ மௌத் ஓர்கன் ★ மெலோடிக்கா

ஆகியவற்றுடன், ஆண்டு 6 - 11 வரை

★ கணிதம் ★ விஞ்ஞானம் ★ ஆங்கிலம் ★ தமிழ்
★ சமயம் ★ சமூகக்கல்வி ★ சித்திரம்

ஆகிய பாடங்களும் விசேட ஆசிரியர்களினால் கற்பிக்கப்படும்.

ஆரம்பம் :- இன்று 07 - 10 - 2000
3-00 P. M — 7-00 P. M

வாசுகி ரங்கன்

அன்பளிப்பு:-

**நியூ லலிதா நகைமாடம்**

170, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(79141)



வெளிவாரி விரிவுரைகள்

**கல்வியாண்டு 2001 / 2002**

G.A.Q., Ist in Com

விரிவுரைகள் ஆரம்பமாகி விட்டன.

**பட்டப்படிப்புகள் கல்லூரி**

57/13, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(79060)



## நண்பனை வாழ்த்துகிறோம்

மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் வழியில் நின்று தமிழ் மக்களுக்கும், தமிழ் மாணவர்களுக்கும் அளப்பரிய சேவைகளாற்றிய எமது நண்பனும் முன்னாள் மாணவர் ஒன்றியச் செயலாளருமாகிய

**சதாசிவம் ஐங்கரன்**

அகில இலங்கைத்தமிழ்க் காங்கிரஸ் தேசியப்பட்டியலில் முதன்மை வேட்பாளராக நியமிக்கப்பட்டதையிட்டு அவரை மனமார வாழ்த்தி, வெற்றிபெறப் பிரார்த்திக்கின்றோம்.

வளாக நண்பர்கள்,
யாழ்ப்பாணம்.

(79190)

# அரசாங்க அறிவித்தல் நாடாளுமன்றத் தேர்தல் 2000-10-10

## இடம்பெயர்ந்த வாக்காளர்களுக்கு மாற்று வாக்கெடுப்பு நிலையங்களிலே வாக்களிக்கும் வசதி

தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேசங்களில் வசித்த / இடம்பெயர்ந்த வாக்காளர்களின் வசதி கருதி அவர்களுக்காக முன்பு அமைக்கப்பட்ட வாக்கெடுப்பு நிலையத்தின் பெயரும் அவர்களின் பிரதேசமும் தற்பொழுது அவர்கள் சென்று வாக்களிக்க வேண்டிய மாற்று நிலையமும் கீழே காட்டப்பட்டுள்ளன.

அந்தந்தப் பிரதேச வாக்காளர் யாவரும் தற்பொழுது சென்று வாக்களிக்க வேண்டிய நிலையத்திலேயே வாக்களித்தல் வேண்டும். எனவே இவர்களுக்காக விசேட பிரயாண வசதிகள் 2000–10–10 ஆம் திகதியன்று என்னால் செய்து கொடுக்கப்படும்.

வாக்கெடுப்புப் பிரிவு – 'ஏ' – சாவகச்சேரி

**தெரிவத்தாட்சி அலுவலர்**

தேர்தல் மாவட்டம் இல. 10 யாழ்ப்பாணம், 2000—10—10

| வாக்கெடுப்புப் பிரதேசம் மாவட்ட இல. | | முன்னைய வாக்கெடுப்பு நிலையம் | தற்பொழுது சென்று வாக்களிக்க வேண்டிய நிலையம் | பின்வரும் உத்தியோக பூர்வ வாக்காளர் அட்டைகளுக்குரியவர்கள் தொடக்கம் | வரை |
|---|---|---|---|---|---|
| 01. | கைதடி | யா/கைதடி குருசாமி வித்தியாலயம் | யா/ நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி | 01 | — 1730 |
| 02. | கைதடி | யா/கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாலயம் | யா/ '' '' '' | 02 | — 1196 |
| 03. | கைதடி | யா/கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாலயம் | யா/ உடுவில் இராமநாதன் கல்லூரி | 01 | — 1348 |
| 04. | கைதடி | யா/கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயம் | யா/ நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி | 01 | — 2001 |
| 05. | நாவற்குளி | யா/கைதடி நாவற்குளி மகா வித்தியாலயம் | யா/ உடுவில் இராமநாதன் கல்லூரி | 01 | — 1218 |
| 06. | நாவற்குளி | யா/கைதடி நாவற்குளி மகா வித்தியாலயம் | யா/ '' '' | 01 | — 1408 |
| 07. | கோகிலாக்கண்டி | யா/கோகிலாக்கண்டி மகாலக்சுமி வித்தியாலயம் | யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரி | 01 | — 507 |
| 08. | கைதடி நாவற்குளி, மறவன்புலோ | யா/மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலயம் | யா/ உடுவில் இராமநாதன் கல்லூரி | 01 | — 1431 |
| 09. | தனங்களப்பு | யா/தனங்களப்பு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை | யா/ '' '' | 01 | — 603 |
| 10. | மீசாலை தெற்கு | யா/மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம் | யா/ நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் | 01 | — 1512 |
| 11. | மீசாலை தெற்கு | யா/மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம் | யா/ '' '' | 01 | — 1729 |
| 12. | சாவகச்சேரி வடக்கு | யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி | யா/ '' '' | 01 | — 1193 |
| 13. | சாவகச்சேரி வடக்கு | யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி | யா/ '' '' | 01 | — 1154 |
| 14. | சாவகச்சேரி தெற்கு | யா/கல்வயல் சண்முகானந்தா வித்தியாலயம் | யா/ '' '' | 01 | — 1431 |
| 15. | நுணாவில் மேற்கு | யா/நுணாவில் மேற்கு அ.த.க. பாடசாலை | யா/ உடுவில் இராமநாதன் கல்லூரி | 01 | — 1864 |
| 16. | நுணாவில் கிழக்கு-மேற்கு | யா/நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயம் | யா/ '' '' | 01 | — 1152 |
| 17. | சாவகச்சேரி தெற்கு | யா/நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயம் | யா/ சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலம் | 01 | — 1488 |
| 18. | சாவகச்சேரி தெற்கு | யா/டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி | யா/ நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் | 01 | — 1830 |
| 19. | சாவகச்சேரி தெற்கு | யா/ டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி | யா/ '' '' | 01 | — 1377 |
| 20. | சாவகச்சேரி தெற்கு | யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி | யா/ '' '' | 01 | — 1192 |
| 21. | கைதடி - நுணாவில், மட்டுவில் | யா/ கைதடி நுணாவில் அ. த. க. பாடசாலை | யா/ உடுவில் இராமநாதன் கல்லூரி | 01 | — 1794 |
| 22. | மட்டுவில் தெற்கு | யா/ மட்டுவில் தெற்கு அ. மி. த க. பாடசாலை | யா/ '' '' | 01 | — 1828 |
| 23. | மட்டுவில் வடக்கு | யா/ சந்திரபுரம் சாந்தநாயகி வித்தியாலயம் | யா/ நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் | 01 | — 1117 |
| 24. | மட்டுவில் வடக்கு | யா/ மட்டுவில் கமலாசனி வித்தியாலயம் | யா/ '' '' | 01 | — 952 |
| 25. | மட்டுவில் வடக்கு | யா/ மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயம் | யா/ '' '' | 01 | — 1148 |
| 26. | சரசாலை | யா/ சரசாலை தெற்கு சரஸ்வதி வித்தியாலயம் | யா/ '' '' | 03 | — 1229 |
| 27. | சரசாலை | யா/ சரசாலை கணேச வித்தியாலயம் | யா/ '' '' | 01 | — 1082 |
| 28. | மீசாவை வடக்கு | யா/ வீரசிங்கம் மகா வித்தியாலயம், மீசாலை | யா/ '' '' | 02 | — 1276 |
| 29. | மீசாலை வடக்கு | யா/ வீரசிங்கம் மகா வித்தியாலயம் மீசாலை | யா/ '' '' | 01 | — 1356 |
| 36. | எழுதுமட்டுவாள் தெற்கு | யா/ எழுதுமட்டுவாள் ஸ்ரீ கணேச வித்தியாலயம் | யா/ '' '' | 01 | — 1206 |
| 43. | தாவளை - இயற்றாலை | யா/ வரணி மகா வித்தியாலயம் | யா/ '' '' | 02 | — 2009 |
| 44. | மந்துவில் | யா/ வரணி மகா வித்தியாலயம் | யா/ '' '' | 01 | — 2112 |
| | | **வரக்கெடுப்புப் பிரிவு: 'க' - கிளிநொச்சி** | | | |
| 01. | வேம்பொடுகேணி, இத்தாவில் | கி/ பளை மகா வித்தியாலயம் | யா/ கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம் | 01 | — 72[illegible] |
| 02. | இளாலி | கி/ கிளாலி றோமன் கத்தோலிக்க த. க. பாடசாலை | யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு மகா '' | 01 | — 589 |
| 03. | முகமாலை | கி/ வேம்பொடுகேணி மகா வித்தியாலயம் | யா/ நெல்லியடி மத்திய மகா '' | 01 | — 850 |
| 04. | தம்பகாமம், வண்ணான்கேணி, பெரியபளை | கி/ பளை மகா வித்தியாலயம் | யா/ '' '' '' | 01 | — 1930 |
| 65. | புலோப்பளை மேற்கு, புலோப்பளை கிழக்கு | கி/ பளை மகா வித்தியாலயம் | யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி | 02 | — 1315 |
| 06. | தர்மக்கேணி, சோரன்பற்று, மாசார் | கி/ சோரன்பற்று கணேச வித்தியாலயம் | யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு மகா '' | 01 | — 1246 |
| 07. | முகாவில், பல்லில், ஊர்வளிக்கன்பற்று, இயக்கச்சி | கி/ வேம்பொடுகேணி மகா வித்தியாலயம் | யா/ நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் | 01 | — 905 |
| 08. | சங்கத்தார்வயல், கொத்தான்டார் குளம், கோவில்வயல் | கி/ வேம்பொடுகேணி மகா வித்தியாலயம் | யா/ '' '' | 01 | — 581 |

(சி/1326 7)

# அரசாங்க அறிவித்தல்

## நாடாளுமன்றத் தேர்தல் - 2000-10-10

### உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் அனுப்பிய பிற்பாடு வாக்கெடுப்பு நிலையங்களில் ஏற்பட்ட மாற்றங்கள்

மேற்படி தேர்தலின் பொழுது உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை வாக்காளர்களுக்கு அனுப்பிய பிற்பாடு தவிர்க்கமுடியாத காரணங்களினால் மாற்றப்பட்ட வாக்கெடுப்பு நிலையங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வாக்கெடுப்பு மாவட்ட இல. | உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டையில் குறிக்கப்பட்டுள்ள வாக்கெடுப்பு நிலையம் | தற்பொழுது சென்று வாக்களிக்க வேண்டிய நிலையம் | பின்வரும் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளுக்குரியவர்கள் தொடக்கம் | | வரை |
|---|---|---|---|---|---|
| | **வாக்கெடுப்புப் பிரிவு:- 'ஆ' — வட்டு.** | | | | |
| 32 | யா/சாந்தை சிற்றம்பலம் வித்தியாலயம் | யா/ பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி | 01 | — | 1259 |
| | **வாக்கெடுப்புப் பிரிவு 'இ' -காங்கேசன்துறை** | | | | |
| 02 | யா/மாதகல் விக்னேஸ்வரா வித்தியாலயம் | யா/ மாதகல் புனித தோமஸ் றோமன் கத்தோலிக்க தமிழ்ப் பெண்கள் பாடசாலை | 01 | — | 1773 |
| 03 | யா/மாதகல் விக்னேஸ்வரா வித்தியாலயம் | யா/ மாதகல் புனித தோமஸ் றோமன் கத்தோலிக்க தமிழ்ப் பெண்கள் பாடசாலை | 01 | — | 1433 |
| | **வாக்கெடுப்புப் பிரிவு: 'உ' — கோப்பாய்** | | | | |
| 42 | யா/இருபாலை இலங்கைத் திருச்சபை தமிழ்க் கலவன் பாடசாலை | யா/ கோப்பாய் மகாவித்தியாலயம் | 01 | — | 1020 |
| 43 | யா/கோப்பாய் தெற்கு ஸ்கந்தவேள் வித்தியாலயம் | யா/ கோப்பாய் மகாவித்தியாலயம் | 01 | — | 1256 |
| | **வாக்கெடுப்புப் பிரிவு:- 'ஊ' — உடுப்பிட்டி** | | | | |
| 03 | யா/ கரணவாய் மணியகாரன் தோட்டம் வித்தியாலயம் | யா/ கரணவாய் மகா வித்தியாலயம் | 02 | — | 1684 |
| 09 | யா/ கம்பர்மலை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை | யா/ வல்வெட்டி விநாயகர் வித்தியாலயம் | 03 | — | 2043 |
| 10 | யா/ கெருடாவில் இந்து தமிழ்க் கலவன் பாடசாலை | யா/ வல்வை சிவகுரு வித்தியாலயம் | 01 | — | 1723 |
| 14 | யா/ பொலிகண்டி அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை | யா/ பொலிகண்டி இந்துசபை தமிழ்க் கலவன் பாடசாலை | 01 | — | 1500 |
| 19 | யா/ வல்வெட்டி. இந்து தமிழ்க் கலவன் பாடசாலை (ஆண்கள்) | யா/ வல்வெட்டி விநாயகர் வித்தியாலயம் (ஆண்கள்) | 01 | — | 2953 |
| | யா/ வல்வெட்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை (பெண்கள்) | யா/ வல்வெட்டி விநாயகர் வித்தியாலயம் (பெண்கள்) | | | |
| | **வாக்கெடுப்புப் பிரிவு:- 'ஊ' — உடுப்பிட்டி** | | | | |
| 25 | யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி | யா/ உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி | 01 | — | 1759 |
| 36 | யா/ கரணவாய் தெற்கு விநாயகர் வித்தி. | யா/ கரவெட்டி விக்கினேஸ்வரா வித்தியாலயம் | 02 | — | 1483 |
| | **வாக்கெடுப்புப் பிரிவு:- 'எ' — பருத்தித்துறை** | | | | |
| 09 | யா/ துன்னாலை மேற்கு மெதடிஷ்ற் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை | யா/ புலோலி மெதடிஸ்ற் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை | 02 | — | 1413 |
| 14 | யா/ புற்றளை மகா வித்தியாலயம் | யா/ புலோலி மெதடிஸ்ற் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை | 02 | — | 2041 |
| 19 | யா/ சென். தோமஸ் மகளிர் பாடசாலை பருத்தித்துறை | யா/ கலட்டி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை | 02 | — | 1950 |
| | **வாக்கெடுப்புப் பிரிவு:- 'ஏ' — சாவகச்சேரி** | | | | |
| 31 | யா/ விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம் | யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம் | 01 | — | 1332 |
| 32 | யா/ கச்சாய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை | யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம் | 01 | — | 1582 |
| 34 | யா/ கொடிகாமம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை | யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம் | 01 | — | 1733 |
| 35 | யா/ எழுதுமட்டுவாள் வடக்கு தமிழ்க் கலவன் பாடசாலை | யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம் | 01 | — | 701 |
| 37 | யா/ உசன் இராமநாதன் மகா வித்தியாலயம் | யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம் | 01 | — | 398 |
| 38 | யா/ உசன் இராமநாதன் மகா வித்தியாலயம் | யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம் | 02 | — | [illegible] |
| 39 | யா/ வரணி சைவப்பிரகாச வித்தியாலயம் | யா/ வரணி மகா வித்தியாலயம் | 01 | — | 1153 |
| 40 | யா/ கரம்பைக்குறிச்சி அ. த. க. பாடசாலை | யா/ வரணி மகா வித்தியாலயம் | 02 | — | 1063 |
| 42 | யா/ நாவற்காடு கணபதிப்பிள்ளை தமிழ்க் கலவன் பாடசாலை | யா/ வரணி மகா வித்தியாலயம் | 01 | — | 1329 |

(சி/13267)

## மனமார வாழ்த்துகின்றோம்

எமது பகுதி வைத்திய அதிகாரி Dr. சதாசிவத்தின் மகனும், இறக்குவானை ஓவசியர் சபாரத்தினத்தின் (J.P) பேரனுமாகிய யாழ். பல்கலைக்கழக மாணவன்

### சதாசிவம் ஐங்கரன்

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தேசியப் பட்டியலில், முதன்மை வேட்பாளராக நியமிக்கப்பட்டதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றோம். பெரியவளவு மகாகணேசன் அருளால் அன்னார் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்படப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.

சித்தன்கேணி ஊர்வாழ் மக்கள்.

(79189)

## நன்றி கூறல்

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமாகிய

### கௌரவ கே.என். டக்ளஸ்தேவானந்தா

அவர்கள், எமக்கு, நியமனக் கடிதங்களைப் பெற்றுத் தந்தமைக்கு, நன்றிகளைத் தெரிவிப்பதோடு, தொடர்ந்து யாழ். மாவட்டத்திற்குச் சேவையாற்ற வேண்டுமென வாழ்த்துகின்றோம்.

கல்விசாரா உத்தியோகத்தர்கள்,
யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

(79192)

## பனம் விதை நடுகை

நெல்லியடி, ஒக் 7

வடமராட்சிப் பகுதியில் 10 ஆயிரம் பனம் விதைகளை நடுகை செய்யும் திட்டத்தில் முதல் கட்டமாக கடந்த திங்கட்கிழமைகாலை அல்வாய்ப் பகுதியில் பனம் விதைகள் நடுகைத் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வடமராட்சி லயன்ஸ் கழகமும், பனை அபிவிருத்திச் சபையும் இணைந்து மேற்கொண்ட நடுகைத் திட்டத்தில் பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் எம். பாக்கியநாதன், பொது முகாமையாளர் எஸ். கோகுலதாஸன், வடமராட்சி, லயன்ஸ் கழகத் தலைவர் லயன் என். சோமசுந்தரம், லயன்ஸ் கழக மாவட்டத்தலைவரும், வடமராட்சி வடக்குப் பிரதேச செயலருமான ஆ. சிவசுவாமி ஆகியோர் மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர்.

இதன் 2 ஆம் கட்ட நடுகைத் திட்டம் மிக விரைவில் மேற்கொள்ளப்படவிருப்பதாக வடமராட்சி லயன்ஸ் கழகச்செயலாளர் லயன் எம். தர்மலிங்கம் தெரிவித்தார்.

யா/ சாவகச்சேரி

## இந்து ஆரம்ப பாடசாலையைச் சேர்ந்த

2000 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி எய்திய பின்வரும் மாணவர்களை

## வாழ்த்துகின்றோம்

| | | | |
|---|---|---|---|
| 01. N லக்ஷிகா | — 168 | 13. S. சகீதா | — 146 |
| 02 Y. அனுஜா | — 165 | 14. S. நீரிஜா | — 144 |
| 03. K. எழில்வேள் | — 163 | 15. P ஜீவிதா | — 142 |
| 04. M. ஞானகரன் | — 163 | 16. S. ஞானசேந்தன் | — 141 |
| 05. N. வேற்கரன் | — 162 | 17. K. அகிலன் | — 141 |
| 06. T. நிருஷன் | — 162 | 18. N. தவநிவிஸ்ரி | — 140 |
| 07. T. மிதுலா | — 160 | 19. T. தர்ஷன் | — 138 |
| 08. B. அருண் | — 159 | 20. K. அர்ச்சுனன் | — 136 |
| 09. S. வாகுலன் | — 153 | 21. T. சர்மிலன் | — 136 |
| 10. S. யதுகுலன் | — 151 | 22. S. மிதுனா | — 134 |
| 11. S. கோபிராஜ் | — 148 | 23. S. தர்மசிலன் | — 134 |
| 12. B. தினுபன் | — 147 | | |

அதிபர், ஆசிரியர்கள்,
பெற்றோர்கள்.

## வாழ்த்துகின்றோம்

★★★★★★★★

யாழ். பல்கலைக் கழகத்தில்
06–10–2000 (நேற்று)
B.B.A பட்டம் பெற்ற (முகாமைத்துவமாணி)

### கந்தசாமி பார்த்தீபன்

அவர்களை உளமார வாழ்த்துகின்றோம்

வர்த்தகப் பிரிவு
மாணவிகள் (2000)
உடுப்பிட்டி.

(79178)



மானிப்பாய்

## பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம் (வ-து)

## பொதுச்சபை உறுப்பினர்களுக்கான அறிவித்தல்

மேற்படி சங்கத்தின் 15 ஆவது வருடாந்தப் பொதுச் சபைக் கூட்டத்தினை எதிர்வரும் 2000 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 29 ந் திகதி [29-10-2000] ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 00 மணிக்கு சங்கத்தின் தலைமைக்காரியாலய மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு. மா. செல்வராசா அவர்கள் தலைமையில் நடத்துவதற்கு சங்க இயக்குநர் சபை தீர்மானித்துள்ளது என்பதை இத்தால் சங்கத்தின் சகல பொதுச்சபை உறுப்பினர்களுக்கும் அறியத் தருகின்றோம். கூட்ட நிகழ்ச்சி நிரல் பின்னர் அனுப்பி வைக்கப்படும்.

மா. செல்வராசா
தலைவர்

நா. துரைச்சாமி
செயலாளர்

05-10-2000 (சி/13254)



## யா/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி

எமது கல்லூரியில் 5 ஆம் தரப் புலமைப் பரிசிற் பரீட்சையிலும், க. பொ த. (சா/த.)ப் பரீட்சையிலும் சாதனை படைத்த மாணவர்களை வாழ்த்துகின்றோம்:

### 5 ஆம் தரப் புலமைப் பரிசில் - 2000

சு. தேவகி — 167 லோ. அர்ச்சிகா — 155
யோ. அன்பரசி — 141 சி. ஜெயதர்சி — 136
சி. திவாகரன் — 136

### க. பொ. த. ( சா/த. ) - 1999

கு. ஜெயப்பிரகாஷ் -9D C கு. சிவகௌரி -7D 3C
செ. தர்சினி -6D 4C செ. சுகன்யா -5D 4CS

இவர்களுடன் க. பொ. த. உயர்தரத்திற்குத் தகுதி பெற்ற 30 மாணவர்களையும் உளமாரப் பாராட்டுகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சபை,
பழைய மாணவர் சங்கம்.

(79140)



## யா/ சுழிபுரம் கிழக்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

2000 ஆம் ஆண்டில் நடைபெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த பின்வரும் மாணவர்களையும்

| | புள்ளிகள் |
|---|---|
| கணேசநாயகம் யோகப்பிரியா | 165 |
| நடராசா சுகன்யா | 148 |
| பூலோகம் அரவிந்தன் | 141 |

அத்தோடு வெட்டுப் புள்ளிக்கு அண்மித்த புள்ளிகளைப் பெற்ற 3 மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துவதோடு மாணவர்களுக்கு வேண்டிய சகல ஊக்குவிப்புகளையும் திறம்பட அளித்த அதிபர், ஆசிரியர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

பழைய மாணவர்கள்.

(சி/13253)


## இடர்க்காலக் கொடுப்பனவு கிடைக்கவில்லை

யாழ்ப்பாணம், ஒக். 7

பனை அபிவிருத்திச் சபையின் ஊழியர்களுக்கு ஏனைய அரச திணைக்கள ஊழியர்களுக்கு வழங்கப்படும் இடர்க்காலக்கொடுப்பனவு எதுவும் வழங்கப்படவில்லை என்று கவலை தெரிவிக்கப்படுகின்றது.

இடர்க்காலக் கொடுப்பனவு தொடர்பாக சம்பந்தப்பட்ட அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் இது வரையும் இக் கொடுப்பனவு வழங்கப்படவில்லை.

அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்த மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோக ஜெயவர்த்தனவிடம் இக் கொடுப்பனவு தொடர்பாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பனை அபிவிருத்திச் சபையின் ஊழியர்களுக்கு இடர்க்காலக் கொடுப்பனவு வழங்குவதற்கு 13 லட்சம் ரூபா தேவை என்றும் —

அதற்கான நிதி சபையின் சேமிப்பில் உள்ள போதும் அதனை ஊழியர்களுக்கு வழங்குவதற்கான அனுமதி உரிய இடங்களிலிருந்து கிடைக்கவில்லை என்றும் — தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக சபையின் தலைவர் மு. பாக்கியநாதன் வட மாகாண புனரமைப்பு அமைச்சுடன் அண்மையில் தொடர்பு கொண்டார்.

பனை அபிவிருத்திச் சபை ஊழியர்களின் இடர்க்காலக் கொடுப்பனவு தொடர்பாக பரிசீலனை செய்யப்பட்டு வருவதாக அமைச்சின் செயலாளர் கூறியுள்ளார்.

(ஐ-5)


## 2 ஆம் ஆண்டு நினைவலைகள்



### அமரர் சின்னத்தம்பி செல்லத்துரை

(ஓய்வு பெற்ற பொலீஸ் அத்தியட்சகர்)

அன்னை மடியில்: 01 - 07 - 1935
ஆண்டவன் அணைப்பில்: 07 - 10 - 1998

ஆண்டிரண்டு மறைந்ததப்பா
ஆறவில்லை நம்துயரம்
மீண்டுமொரு பிறப்புண்டேல்
மேதினியில் இணைந்திடுவோம்
ஆண்டவனின் தாள் நிழலில்
அடைந்திடுக சாந்தி என
வேண்டி நிதம் துதிக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்;
மனைவி, பிள்ளைகள்,
மருமகள்.

நுணாவில் மேற்கு,
கண்டி வீதி,
சாவகச்சேரி.

(79142)



## உலக சேவைத்தினம்-08-10-2000

மானிப்பாய் வட்டம் / இணுவில் / சுன்னாகம்
லயன்ஸ் கழகங்கள்
தென்னிந்திய திருச்சபை - யாழ். ஆதீனத்துடன்
இணைந்து
யாழ். போதனா வைத்தியசாலை
பிரபல வைத்திய நிபுணர்களின்
அனுசரணையுடன் நடத்தும்

## இலவச விசேட மருத்துவ முகாம்

காலம்: 08 - 10 - 2000 ஞாயிற்றுக்கிழமை
காலை 8.30 – 12.00 மணி வரை

இடம்: மக்லியட் வைத்தியசாலை, இணுவில்,

வசதியற்ற மக்களின் நலன்கருதி நடத்தப்படும் இவ் இலவச மருத்துவ முகாமில் தங்கள் நிபுணத்துவ சேவையை வழங்க இருக்கும்

யாழ். போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர்கள்:

டாக்டர் திருமதி J. கணேஷமூர்த்தி
மருத்துவ நிபுணர்

டாக்டர் K. சிவசுப்பிரமணியம்
காது / மூக்கு / தொண்டை
சத்திர சிகிச்சை நிபுணர்

டாக்டர் K. சிவநேசன்
மருத்துவ நிபுணர்

டாக்டர் G. பவானி
மகப்பேற்று வைத்திய நிபுணர்

டாக்டர் செல்வி கலா சோமசுந்தரம்
குழந்தைகள் வைத்திய நிபுணர்

டாக்டர் N. சிறிஸ்கந்தராஜா
சிரேஷ்ட வைத்திய அதிகாரி

முகாமுக்கு வருகை தரும் ஒழுங்கின்படி குறிப்பிட்ட தொகையினரையே மருத்துவப் பரிசோதனை பெறமுடியுமாதலால் – குறிப்பாக இடம்பெயர்ந்த வசதி குறைந்தவர்களை நேரத்திற்குச் சமுகமளித்து பயன்பெறும்படி அன்புடன் வேண்டுகிறோம்.

குறிப்பு. தென்னிந்திய திருச்சபையினர் வைத்திய ஆலோசனைக்கமைய பாவிக்க வேண்டிய மருந்துகளை இலவசமாக வழங்கவுள்ளார்கள்.

லயன் A. இருதயநாதன்
தலைவர்,
மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகம்

லயன் K. தேவராஜா
தலைவர்,
இணுவில் லயன்ஸ் கழகம்

லயன் S. சச்சிதானந்தன்
தலைவர்,
சுன்னாகம் லயன்ஸ் கழகம்

சேவை இணைப்பு: லயன் S. S. தங்கராஜா
மாவட்டத் தலைவர் – கழகவிருத்தி

அன்பளிப்பு:

**SIVA KANESAN STORES,**
41, GRAND BAZAAR, JAFFNA.

(சி/13193)

உ

கொக்குவில் கிழக்கு

## பொற்பதி விநாயகர் ஆலயம்
## மானம்பூ உற்சவ விஞ்ஞாபனம்

இன்று (07-10-2000) சனிக்கிழமை மாலை 3மணிக்கு விநாயகர் கிராம வீதிஉலா வந்து 4.00 மணிக்கு மானம்பூ வாழை வெட்டு நடைபெறும்.

குறிப்பு:-

ஆலயத்தின் திருப்பணி வேலைகளுக்கு தனிப்பட்ட யாரையும் நிதி சேகரிக்க நியமிக்கவில்லை என்பதை அடியார்களுக்கு அறியத் தருகின்றோம். தற்போது திருப்பணிகள் எதுவும் நடைபெறவில்லை.

ஆலயபரிபாலகர்,
தியாகராஜக் குருக்கள்,
நடராஜசர்மா.

(79841)



## மலை வேப்பங்கன்றுகள் (Mahogani) விற்பனைக்கு

விரைவாக வளர்ந்து நிழல்தரக்கூடியதும் மரத் தளபாடங்களுக்கு பெறுமதி மிக்க பலகையைத் தரக்கூடியதுமான மலை வேம்பு நாற்றுக்கள் உடன் விற்பனைக்கு உள்ளன. பாடசாலைகள், நிறுவனங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தொடர்பு கொள்ளவேண்டிய இடம்:-

தலைவர்,
விவசாய விஞ்ஞானக் கழகம்,
சென். ஜோன்ஸ் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

(சி/13258)


## நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் 2000.10.10
## வாக்காளர்களுக்கான அறிவித்தல்

இத் தேர்தலுக்கான வாக்கெடுப்பு 2000 ஆண்டு ஒக்ரோபர் மாதம் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 7.00 மணிக்கும் பி.ப. 4,00 மணிக்கும் இடையில் நடைபெறவிருக்கின்றது வாக்காளர்கள் தமது வாக்கெடுப்பு நிலையங்களுக்கு நேரகாலத்தோடு செல்லுமாறு அறிவுறுத்தப்படுகின்றார்கள்

02. உங்களுக்கு அனுப்பப்பட்ட வாக்கெடுப்பு அட்டைகள் தேருநர் பதிவேடுகளில் தரப்பட்டுள்ளவாறு வாக்கெடுப்பு நிலையம், பெயர், தொடர் இலக்கம் முதலிய விவரங்களைத் தருகின்றன. ஆனால் வாக்கெடுப்பு அட்டையொன்று வாக்குச் சீட்டுக்களைப் பெற்றுக் கொள்வதற்கு அவசியமாகாது. நீங்கள் பதிவு செய்யப்பட்ட வாக்காளர் ஒருவரானால் தயவுசெய்து உங்களது வாக்கெடுப்பு நிலையத்திற்குச் சென்று வாக்குச் சீட்டொன்றைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

03 சிங்களத்திலும் தமிழிலும் அச்சிடப்பட்ட அறிவித்தல் ஒன்று ஒவ்வொரு குடிமனைக்கும் வாக்கெடுப்பு அட்டைகளுடன் அனுப்பப்பட்டுள்ளது. இவ்வறிவித்தல் ஒவ்வொரு கட்சியினது அல்லது குழுவினது அபேட்சகர்களையும் அவர்கள் ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட்ட தொடர் எண்களையும் காட்டுகின்றன.

04 வாக்குச் சீட்டுகளில் வேட்பாளர்களைக் குறிக்கும் இலக்கங்கள் மட்டுமே இருப்பதால் வெவ்வேறான மூன்று வேட்பாளர்களுக்கு மூன்றுக்கு மேற்படாத விருப்புக்களை அடையாளமிடும் போது நீங்கள் விரும்பும் வேட்பாளர்களை, அவர்களைக் குறிக்கும் இலக்கங்களால் அடையாளம் காண வேண்டியிருக்கும். உங்கள் வீடுகளில் கிடைக்கப்பெறும் மேற்கூறப்பட்ட அறிவித்தல் இவ்விவரங்கள் நீங்கள் அறிந்து பொருத்தமான இலக்கங்களை ஞாபகம் வைத்துக்கொள்ள உதவும். மேலும் நீங்கள் ஞாபகப்படுத்திக்கொள்ள வேண்டுமானால் இதே விவரங்களைக் கொண்ட வாக்கெடுப்பு அறிவித்தல் ஒன்று வாக்கெடுப்பு நிலையங்களில் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும்.

05 நீங்கள் வாக்களிக்கச் செல்லும் போது தேசிய அடையாள அட்டையையாவது அதுவில்லாதவிடத்து வேறேதேனும் அடையாள அட்டையையாவது வைத்திருப்பது உங்கள் அடையாளத்துக்குச் சவால் விடுக்கப்படும் பொழுது அதனை நிரூபிப்பதற்கு பிரயோசனமாகும.

06 வாக்குச் சீட்டொன்றில் வாக்கொன்று அடையாளமிடப்படாதவிடத்து ஏதும் வாக்குச் சீட்டு வலுவுடையதாகுமெனக் கருதப்படமாட்டாது எனவே முதலாவதாக நீங்கள் விரும்பும் கட்சியின் சுயேச்சைக் குழுச் சின்னத்துக்கு எதிரே வாக்கொன்றை அடையாளமிடுமாறு அறிவுறுத்தப்படுகின்றது. அதன் பிறகு நீங்கள் விரும்பினால் விருப்புக்களை அடையாளமிடலாம். நீங்கள் விரும்பும் வேட்பாளரின் அச்சிட்ட இலக்கத்திற்கு மேல் புள்ளடி ஒன்றை இடுவதால் விருப்பொன்றைத் தெரிவிக்கலாம். அத்தகைய விருப்புக்கள் மூன்றினை நீங்கள் அடையாளமிடலாம்.

07 வாக்களித்த பின் காலம் தாமதிக்காமல் அவ்விடத்தை விட்டு அகலுமாறும் வாக்கெடுப்பு நிலையத்திற்கு அருகே தங்கியிருப்பதைத் தவிர்க்குமாறும் அன்புடன் வேண்டப்படுகிறீர்கள் இது கடமையில் ஈடுபட்டிருக்கும் வாக்கெடுப்பு அலுவலர்களுக்கும் பொலிஸாருக்கும் உதவியாக இருக்கும்.

**தயானந்த திசாநாயக்க.**
தேர்தல்கள் ஆணையாளர்.

தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை.

(சி/13267)

## சமய சந்நிதிகளில்

புன்னாலைக்கட்டுவன், ஒக். 7

புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை சித்திவிநாயகர் ஆலயத்தில் மானம்பூத் திருவிழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு விசேட அபிஷேகத்துடன் ஆரம்பமாகும் விசேட மேளக்கச்சேரியுடன் சுவாமி வீதியுலா வரும் நிகழ்வு இடம்பெறும்.

(க-133)

★ ★ ★

கொழும்புத்துறை, ஒக். 7

பண்டத்தரிப்பு புனித செபமாலை அன்னை தேவாலய வருடாந்தத் திருவிழாவின் திருப்பலி மற்றும் திருச்சொரூப பவனி என்பன நாளை ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெறவுள்ளன.

★ ★ ★

கொழும்புத்துறை, ஒக். 7

யாழ். இராசாவின் தோட்டம் அருள்மிகு அருள்மாதா ஆலய வருடாந்தத் திருவிழாவின் திருப்பலி மற்றும் திருச்சொரூபபவனிஎன்பன நாளை ஞாயிற்றுக்கிழமை காலை பங்குத்தந்தை அருட்திரு பயஸ் அடிகளார் தலைமையில் நடைபெறும்.

(இ-7-30)

## ஏடு தொடக்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக். 7

விஜயதசமி தினமான இன்று ஏடு தொடக்கும் நிகழ்வுகள் ஆலயங்களில் இடம் பெறவுள்ளன.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் காலை 9 மணிப் பூசையை அடுத்து நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் ஏடு தொடக்குவார்.

தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்தில் முற்பகல் 11 மணிக்கு சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஏடு தொடக்கிவைப்பார்.

[இ-3-30]


06 – 10 – 2000 நேற்று

வெள்ளி விழா

கொண்டாடிய தேவி அச்சகத்தினருக்கு எமது வாழ்த்துக்கள்.

லாலா சோப் தொழிற்சாலை
அச்சுவேலி. (சி/13264)



## நினைவழியா இரண்டாம் ஆண்டதனில்...



திருமதி இளையாச்சி ஐயாத்துரை
(மணி அக்கா)

மலர்வு 05–03–1929 உதிர்வு 30–09–1998

திதி: விஜயதசமி

அரிய தாய், பெரிய தாய், வணக்கத்திற்குரிய தாய், வளர்த்த தாய், வாழ்ந்த தாய், எங்கள் தாய்!

விஜயதசமி நாள் அன்று இறைவனடி சேர்ந்திட்ட எங்கள் தாயின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நீங்காத நினைவுகளுடன்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

49/4 A, சிறாம்பியடி,
யாழ். வீதி,
யாழ்ப்பாணம்.

(79193)


## நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் - 2000-10-10
## வாக்களித்தலும் விருப்புத் தெரிவித்தலும் பற்றிய சுருக்கமான விளக்கம்

வாக்குச் சீட்டின் மாதிரிப் படிவம்

| | | |
|---|---|---|
| "அ" கட்சி | சின்னம் | |
| "ஆ" கட்சி | சின்னம் | |
| "இ" கட்சி | சின்னம் | |
| சுயேச்சைக் குழு 1 | சின்னம | |
| சுயேச்சைக் குழு 2 | சின்னம் | |
| சுயேச்சைக் குழு 3 | சின்னம் | |

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 11 | 12 | | | | | | | | |

01. இது வாக்குச் சீட்டின் மாதிரியொன்று மட்டுமே.

02. அரசியற் கட்சிகளினதும் சுயேச்சைக் குழுக்களினதும் பெயர்கள் அவைகளின் சின்னங்களுடன் மேற்பகுதியில் காட்டப்பட்டுள்ளது. ஒவ்வொரு சின்னத்திற்கும் எதிரே வெற்றுக்கூடொன்று உள்ளது. இதில் ஏதேனுமொரு கூடொன்றில் உங்கள் வாக்கை அடையாளமிடலாம். வாக்களிக்கும்போது நீங்கள் விரும்பும் சின்னத்திற்கு எதிரேயுள்ள வெற்றுக்கூட்டில் 'புள்ளடி' யிடல் வேண்டும.

03. ஒவ்வொரு வேட்பாளருக்கும் பிரித்தொதுக்கப்பட்டுள்ள இலக்கங்கள் முறையே ஒரு வரிசையில் பத்து என்றவாறு கீழ்ப் பகுதியில் காட்டப்பட்டுள்ளது. விருப்பொன்றை அடையாளமிடும் போது நீர்விரும்பும் வேட்பாளரின் இலக்கத்தின் மீது உங்களால் 'புள்ளடி' இடப்படல் வேண்டும். வேட்பாளர்கள் மூவருக்கு மேற்படாத எண்ணிக்கைக்கு அதாவது அவ்விலக்கங்கள் மூன்றுக்கு மேற்படாத எண்ணிக்கை மீது உங்கள் விருப்பினை அடையாளமிட முடியும்.

04. வாக்கொன்று இல்லாத வாக்குச்சீட்டு செல்லுபடியற்றதாகும். அது எவ்வித பெறுமதியுமற்றதோடு அல்லாமல் நிராகரிக்கவும் படும் ஆகையினால் முதலில் வாக்கை அடையாளமிட்டு அதன் பின் விருப்பமாயின் விருப்புக்களை அடையாளமிடுவதே பொருத்தமானது என்பதைத் தயவுகூர்ந்து நினைவிற் கொள்ளவும்.

தயானந்த திசாநாயக்க,
தேர்தல்கள் ஆணையாளர்.

தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை,
இராஜகிரிய,
ஸ்ரீ ஜயவர்தனபுர.

(சி/13267)

# பாராட்டுகின்றோம்

யாழ்.பல்கலைக்கழகத்தில் கலைப்பட்டதாரிப் பட்டம் பெற்று மகிழும் சாள்ஸின் மைந்தன்

**செல்வன் பிரான்சிஸ் றெஜிஸ்நியூட்டன்**

சாதனை பல பெற்று வாழ பாராட்டி வாழ்த்துகின்றோம்

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பா. அ. சங்கம், பழைய மா. சங்கம்.**

யா/புனித சாள்ஸ் மகாவித்தியாலயம்,
யாழ்ப்பாணம். (79100)

---

உ
ஓம் சக்தி

**யாழ். வண்ணை குளங்கரை மருதடி**

# ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் தேவஸ்தானம்

## "சரணம் காமாக்ஷி"

பாகம் I, II

## ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு விழா

காலம்: **நாளை 8-10-2000 ஞாயிறு**
காலை 8.30 மணி (புதிய நேரம்)

இடம்:
**ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் ஆலய முன்றல்.**

தலைவர்; **திரு. இ. வே. கந்தசாமி**
(ஆலய தர்மகர்த்தா சபைத் தலைவர்)

பிரதம விருந்தினர்:
**திரு. வே. பொ. பாலசிங்கம்**
(யாழ். மாநகரசபை ஆணையாளர்)

மதிப்புரை: திரு. சு. கணபதிப்பிள்ளை
(சங்கீத உதவிக் கல்விப்பணிப்பாளர்)

வாழ்த்துரை: கலாநிதி ச. நா. தணிகாசலம்பிள்ளை
(மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர், வடக்கு - கிழக்கு மாகாணசபை)

சிறப்பு விருந்தினர்கள்:
கலாநிதி க. குணராஜா
(பிரதேச செயலர், நல்லூர்)

கலாநிதி சபா. ஜெயராஜா
(தலைவர், நடனத்துறை, யாழ். பல்கலைக்கழக நுண்கலைப் பீடம்)

இசையரசு நா. வி. மு. நவரத்தினம்
(தலைவர், இசைத்துறை, யாழ். பல்கலைக்கழக நுண்கலைப் பீடம்)

### நிகழ்ச்சி நிரல்

★ மங்கள விளக்கேற்றல் ★ இறைவணக்கம்
★ வரவேற்புரை
★ ஆசியுரை:
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்.
(நல்லை ஆதீன முதல்வர்)
★ தலைமையுரை ★ மதிப்புரை
★ வாழ்த்துரை ★ பிரதம விருந்தினர் உரை
★ கலைஞர்களைக் கௌரவித்தல்
★ நன்றியுரை
★ ஒலிப்பதிவு நாடாவை வெளியீடு செய்து வைத்தல்
திரு. வே. பொ. பாலசிங்கம்
(யாழ். மாநகரசபை ஆணையாளர்)
★ முதல் நாடாவைப் பெறுபவர்
திரு. க. சுந்தரேசன்
(உதவி ஆணையாளர், சமநல சேவைத் திணைக்களம்)

### கலை நிகழ்ச்சி

ஒலிப்பதிவில் பங்கு கொண்ட கலைஞர்கள் வழங்கும்
"சரணம் காமாக்ஷி" பக்தி கானங்கள்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**- ஆலய தர்மகர்த்தா சபை.**
(நாச்சிமார் கோயில்)

(79173)

---

# கண்ணீர் அஞ்சலி

யாழ். பல்கலைக் கழக விவசாயபீட 2 ஆம் வருட மாணவன்

**கு. வி. நிஷாந்தன்** அவர்களின் அன்புத் தந்தையார்

## அமரர் விசுவலிங்கம்

அவர்களின் மறைவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**விவசாய பீடமாணவர் ஒன்றியம், யாழ். பல்கலைக்கழகம்.**

(சி/13269)

---

# கடனைச் செலுத்துவதற்குச் சலுகை

யாழ்ப்பாணம், ஒக். 7

தேசிய வீடமைப்பு அதிகார சபை மற்றும் வீடமைப்புத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட வீடமைப்புக் கடன்களை முழுமையாகச் செலுத்துபவர்களுக்கு 35 சதவீத கழிவு வழங்க வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை தீர்மானித்துள்ளது.

இந்தச் சலுகையைப் பயன்படுத்தி கடன் நிலுவையை முற்றாகச்செலுத்தித் தமது ஈட்டுறுதி, காணி உறுதி உட்படப் பெறுமதியான ஆவணங்களை மீட்டுக் கொள்ள விரும்புபவர்கள் யாழ். மாவட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

இந்தச் சலுகை டிசெம்பர் 31 ஆம் திகதி வரையுமே நடைமுறையில் இருக்கும் என்று மாவட்ட முகாமையாளர் எஸ். மாசிலாமணி தெரிவித்துள்ளார்.

# நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், ஒக். 7

யாழ். மேலதிக மாகாணக் கல்விப் பணிமனையில் பிரதம எழுதுவினைஞராகப் பணி புரியும் பா. சிவபாலனின் 'நகை' கவிதைத் தொகுதி வெளியீட்டுவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி சி. சிவலிங்கராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி ச.நா. தணிகாசலம்பிள்ளை கலந்துகொள்வார்.

நூலின் வெளியீட்டுரையை கலாநிதி காரை. சுந்தரம்பிள்ளையும், ஆய்வுரையை வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரனும் நிகழ்த்துவர். (ஐ-3-51)

# ரூ. 2000 கொடுப்பனவு

யாழ்ப்பாணம், ஒக். 7

யாழ்ப்பாணம் புதிய சோனகத் தெரு கிராம சேவையாளர் பிரிவு 88 இல் தங்கியிருக்கும் இடம்பெயர்ந்தவர்களுக்கு எதிர்வரும் திங்கட்கிழமை 2 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

திரேசம்மா கோயில் முன்பாக உள்ள கட்டடத்தில் வைத்து அன்று காலை 9 மணி தொடக்கம் பகல் 12 மணிவரையும் இந்தக் கொடுப்பனவு வழங்கப்படும் என்று இந்தப் பிரிவுக்கான கிராம சேவையாளர் செல்வி. எஸ். றி. சகுந்தலா தேவி தெரிவித்துள்ளார். (இ-5)


## புலமைப்பரிசில் - 2001

மாதிரிப் பரீட்சை 4 இல் அதிகூடிய புள்ளி பெற்றோர்

★ அ. சாயினி — 183
★ சி. சிவஜனனி — 179
★ உ. நிவேதிகா — 179
★ கோ. கிருஸ்ணஜினா — 172

அடுத்த 5 ஆவது பரீட்சை 08-10-2000 ஞாயிறு காலை 8-30 மணி.

**நாவலர் கல்வி நிலையம்,**
**ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.**
(79256)


# தேர்தல் கடமைகளில் ராணுவம் ஈடுபடுத்தப்படமாட்டாது

## தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக் 7

தேர்தல் கடமைகளில் எக்காரணம் கொண்டும் இராணுவத்தினர் ஈடுபடுத்தப்படமாட்டார்கள். வாக்களிப்பு நிலையங்களுக்குள்ளேயே அவர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

மேற்கண்டவாறு தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தெரிவித்தார்.

பொதுத்தேர்தலில் போட்டியிடும் சகல அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடனும் அவர் நேற்று பேச்சுக்கள் நடத்தினார். அப்பொழுதே அவரால் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

தேர்தல் கடமைகளில் ஈடுபடும் பொலீஸார் ஆளுங்கட்சிக்கு ஆதரவாகச் செயற்படுவதாகவும் வாக்களிப்பு நிலையங்களில் தேர்தல் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக இராணுவத்தினரை ஈடுபடுத்துமாறும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்ட ஜே. வி. பி. பிரதிநிதிகள் கோரி இருந்தனர்.

தேர்தலை அமைதியாகவும், சுமுகமாகவும் நடத்த சகல ஒத்துழைப்புக்களையும்எல்லா அரசியல் கட்சிகளிடமும் தாம் எதிர்பார்ப்பதாகவும் தேர்தல் ஆணையாளர் கூறினார்.

அதேவேளை — நாளை இரவு அனைத்துத் தொலைக்காட்சிகளிலும், வானொலிகளிலும் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க நாட்டு மக்களுடன் பேசவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (இ-8)

# மானம்பூத்திருவிழா

யாழ்ப்பாணம், ஒக். 7

உரும்பிராய் ஓடையம்பதி கற்பக விநாயகர் ஆலயத்தில் இன்று காலை 6-30 மணிக்கு மானம்பூத்திருவிழா இடம் பெறும். (இ-7)


## பரம்சோதி வைத்திய நிலையம்

# திறப்பு விழா

யாழ். நகர்- வடமராட்சி- தீவக மக்களின் போக்குவரத்து வசதி கருதி நோயாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க எமது வைத்திய சேவையை

**220A, ஸ்ரான்லி றோட், யாழ். நகரில்**
(ஸ்ரீதர் தியேட்டர் முன்பாக) இன்று 07-10 2000
**பி. ப. 4.00 மணிக்கு வரும் சுபவேளையில் ஆரம்பிக்கின்றோம்.**

இங்கு தினசரி மதியம் 12. 00 மணி தொடக்கம் பிற் பகல் 3. 30 மணிவரை நோயாளர்கள் சிகிச்சை பெறலாமென்பதை அறியத்தருகின்றோம்.

Dr. K.S. பரஞ்சோதிநாதர்- D.A.M, R.I.M.P (Cey)
(A.M.P, P.I.M, M.S.H.C, M.H.H, M H.D.I.) IND.

| பார்வையிடும் நேரம்: | பார்வையிடும் நேரம்: |
|---|---|
| தினசரி: | 8. 00 A.M. — 11. 30 A.M. |
| 12.00 P.M. — 3.30 P.M. | 4.30 P.M. — 10.00 P.M. |
| 220A, ஸ்ரான்லி றோட், | குளப்பிட்டி றோட், |
| யாழ்ப்பாணம். | ஆலடி, ஆனைக்கோட்டை. |

(79187)



## மலிவு விற்பனை!

# தீபாவளி வாழ்த்து மடல்கள்

தெய்வீகத்தின் வடிவினைப் பிரதிபலிக்கும் பலவிதமான பலவர்ண சுவாமிப் படங்கள்
தென்னிந்திய சினிமா நடிகர்களின் சினிமா வாழ்த்து மடல்கள்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்:

**மக்மிலன் புத்தகசாலை,**
**இல.3, ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

குறிப்பு; வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு.
(சி/13263)



# ஒளியருவி

## வீடியோ & போட்டோ

யாழ். பல்கலைக்கழக 19 ஆவது பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெற்ற பட்டதாரிகளே!

உங்களின் பட்டமளிப்பு விழா
**உள்ளக வெளியகக் காட்சிகளை**
என்றும் பசுமையாக பார்த்து மகிழ்ந்திட ஏற்ற வகையில்
தனித்தனிப் பிரதியாக
மிகக் குறைந்த கட்டணத்தில்
வழங்கவுள்ளோம். எமது நிறுவனத்தில் பதிவுகளை மேற்கொள்வதன் மூலம் பிரதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

இந்த முறை பட்டமளிப்பு விழா உள்ளக வெளியக படப்பிடிப்பு இரண்டையும் மேற்கொண்ட நிறுவனம்
எமது நிறுவனமே.

15/4, முருகேசர் லேன்,
கொக்குவில். (79257)

**முகாமையாளர்,**
ஒளியருவி